பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 14 செவ்வாய்க்கிழமை (28-05-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:184

# கடலிலும் கண்காணிப்புப்பணி;

# 12பேர் கொண்ட குழு வருகை!

## கடற்படையின் கப்பல்களில் தங்கியிருந்து செயற்படுவர்

கொழும்பு,மே28

**யுத்தநிறுத்தக் கண்காணிப்புப் பணிகள் வடக்கு - கிழக்கு கடற்பிரதேசத்திலும் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கென 12 வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் நேற்றுமுன்தினம் கொழும்பு வந்துசேர்ந்திருக்கின்றனர்.**

**இவர்களின் பணி நாளைமறுதினம் திருகோணமலைக் கடற்பரப்பில் தொடங்கும்.**

இந்தப் பணியில் ஈடுபடுவதற்காக பின்லாந்து, நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகளில் இருந்து 12 கண்காணிப்பாளர்கள் கொழும்பு வந்துள்ளனர்.

கடற்படையின் மூன்று கப்பல்களில் இருந்தவாறு இந்தப் பணியை இவாகள் மேற்கொள்வர்.

திருகோணமலைக் கடற்பகுதியில் எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்

(12ஆம் பக்கம் பார்க்க)

### 'சவப்பெட்டிகளைத் தயாராக வைத்திருங்கள்'

## வீரமுனைப் பகுதி மக்களுக்கு அதிரடிப்படை பயமுறுத்தல்!

அம்பாறை,மே28

அதிரடிப்படையினரின் அத்துமீறல் நடவடிக்கையை எதிர்த்து இரண்டு நாள்கள் பூரண ஹர்த்தால் நடத்திய அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட மக்களைப் பழிவாங்கும் நடவடிக்கையில் அதிரடிப்படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

காரைதீவில் நிலைகொண்டுள்ள அதிரடிப்படையினர் வீரமுனை கிராமத்துக்குச் சென்று இரண்டு நாள்களாகத் துருவித்துருவி விசாரணை செய்தனர். இறுதியில் ஒவ்வொரு வீட்டுக்காரர்களிடமும் 'இரண்டு சவப் பெட்டிகளைத் தயாராக வைத்திருங்கள். இந்த மாத இறுதிக்குள் அவை உங்களுக்குத் தேவைப்படும்' என்று பயமுறுத்திச் சென்றனர்.

இதை அடுத்து வீரமுனை மக்கள் அச்சமும் பதற்றமும் அடைந்த நிலையில் செய்வதறியாது தவித்து நிற்கின்றனர். அதிரடிப்படையினரால் தமக்கு எந்த நேரமும் ஆபத்து வரலாம் என்ற பயப்பிராந்தியில் அவர்கள் தினமும் செத்துப்பிழைக்கின்றனர்.

அதிரடிப்படையினர் 30 பெயர்கள் அடங்கிய பட்டியலுடன் வீரமுனைக் கிராமத்துக்குச் சென்று அந்த 30 பேரையும் பிடிக்க முயற்சி செய்தனர். பெயர்ப்பட்டியலில் இருந்த எவரையும் அவர்களால் கண்டுகொள்ள முடியவில்லை. எனவே வீட்டுக்கு வீடு "சவப்பெட்டி எச்சரிக்கை" விடுத்துச் சென்றனர்.

இத்தனைக்கும் வீரமுனைக் கிராம மக்கள் செய்த குற்றம் என்ன?

(12ஆம் பக்கம் பார்க்க)

### அடிப்படைப் பிரச்சினையில் இணக்கம் காண்பதை விடுத்து

## இடைக்கால நிர்வாகம் பற்றி முதலில் பேசுவதை எதிர்க்கிறார் ஜனாதிபதி!

கொழும்பு,மே28

இனப்பிரச்சினைக்கான அடிப்படைக் காரணங்கள் பற்றியே முதலில் பேசி இணக்கம் காணவேண்டும். வடக்கு - கிழக்கின் ஏனைய பிரச்சினைகள் பற்றிப் பேசும்போதுதான் இடைக்கால நிர்வாகம் பற்றியும் பேசவேண்டும். அடிப்படைப் பிரச்சினை தொடர்பாக இணக்கம் ஏற்படாதவரை இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படக்கூடாது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

நோர்வே சமாதானக் குழுவின் தலைவரும் நோர்வே நாட்டு பிரதி வெளிவிவகார அமைச்சருமான விடர் ஹெல்கிஸன் நேற்று ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். அச்சமயமே அவரிடம் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று மாலை நடந்த இந்தச் சந்திப்புக் குறித்து ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதிக்கும் விடர் ஹெல்கிஸனுக்கும் இடையில் சுமுகமான வகையில் பேச்சுக்கள் இடம்பெற்றன.

"தாய்லாந்தில் ஆரம்பமாகவிருக்கும் பேச்சுகளுக்கான நிகழ்ச்சிநிரல் தயாரிக்கப்பட்டு வருகின்றது. பேச்சில் பங்குபற்றவிருக்கும் அரசும், விடுதலைப் புலிகளும் தம்து பிரேரணைகளை முன்வைக்கலாம்" என்று ஹெல்கிஸன் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அடிப்படைப் பிரச்சினைகள் குறித்த விடயமும் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கவேண்டும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இனப்பிரச்சினைக்கான அடிப்

(12ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



தயாராக வைச்சிருக்கிறது சரி. கடைசியா யாருக்குப் பயன்படப் போகுதோ தெரியாது.

## தடைநீக்க விவகாரத்தில் நோர்வே தலையிடாது!

### ஹெல்கிஸன் கூறுகிறார்

கொழும்பு,மே28

விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கம் குறித்து ஸ்ரீலங்கா அரசாங்கமே முடிவுசெய்யவேண்டும். அந்த விடயத்தில் நோர்வே தலையிடமுடியாது.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன்.

கொழும்பில் நேற்று தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்குக் கருத்

(12ஆம் பக்கம் பார்க்க)

### 'அன்ரனா' பொருத்திய சமயம்

## மின்சாரத் தாக்குதலுக்குள்ளான இளைஞர் நேற்று உயிரிழந்தார்!



யாழ்ப்பாணம்,மே28

திருநெல்வேலியில் உள்ள தமது வீட்டில் 'அன்ரனா' பொருத்த முயற்சித்த சமயம் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகி யாழ்.மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரில் தனபாலசிங்கம் தயாபரன்(வயது26) என்ற இளைஞர் சிகிச்சை பயனளிக்காது நேற்று அதிகாலையில் உயிரிழந்தார்.

இவரது சடலம் மரண விசாரணையின் பின்னர் நேற்றுப் பிற்பகல் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி விபத்தில் சிக்கிக் காயமடைந்த இரு சகோதரிகளும் தொடர்ந்து தீவிர சிகிச்சைப் பிரிவிலேயே சிகிச்சை

(12ஆம் பக்கம் பார்க்க)

## 49 போராளிகள் நேற்று வருகை

யாழ்ப்பாணம்,மே28

யாழ்.மாவட்டத்தில் அரசியல் பணிகளில் ஈடுபடுவதற்காக விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த மேலும் 49 போராளிகள் நேற்று இங்கு வந்துள்ளனர்.

முகமாலை ஊடாக யாழ்.வந்த இக்குழுவில் 32ஆண் போராளிகளும் 17பெண் போராளிகளும் இடம்பெற்றுள்ளனர்.

இவர்கள் யாழ். அரசியல்துறையினருடன் இணைந்து தமது பணிகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ-3)

## தொலைபேசி 'அவுட்!'

யாழ்ப்பாணம்,மே28

குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்குமான தொலைபேசிச் சேவை நேற்று நண்பகலுடன் செயலிழந்தது.

மன்னார் தொலைத்தொடர்புக் கோபுரத்துக்கு அப்பால் உள்ள கோபுரங்களுடனான தொடர்புகள் துண்டிகக்கப்பட்டுள்ளதாகவும் -

இதைச் சீராக்கும் பணி நேற்று இரவு வரை தொடர்ந்து இடம்பெற்றதாகவும் -

இன்று காலை சேவை சீராகும் வாய்ப்புக் காணப்படுகின்றது என்றும்-

(12ஆம் பக்கம் பார்க்க)

## மற்றொரு பெண்ணின் சடலமும் புங்குடுதீவில் கரை ஒதுங்கியது!

யாழ்ப்பாணம்,மே28

புங்குடுதீவுக் கடற்கரையில் மேலும் ஒரு பெண்ணின் சடலம் உருக்குலைந்த நிலையில் நேற்றுக் காலை கரையொதுங்கியுள்ளது.

சடலத்தைப் பொறுப்பேற்ற ஊர்காவற்றுறைப் பொலீஸார் யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜாவின் கவனத்துக்கு இதைக் கொண்டுவந்தனர்.

இதைத் தொடர்ந்து நீதிவான் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டார்.

அடையாளம் காணமுடியாது உருக்குலைந்த நிலையில் சடலம் காணப்பட்டபோதும் காதில் இருந்த தோடு மூலம் அச்சடலம் பெண் ஒருவரினுடையது என அடையாளம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கடலில் படகு கவிழ்ந்ததில் காணாமற்போன நால்வர்

மன்னார்,மே28

கடந்த 22ஆம் திகதி தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு படகில் திரும்பிக் கொண்டிருந்தபோது படகு கவிழ்ந்து காணாமற்போன நால்வரின் பெயர் விவரங்கள் தெரியவந்திருக்கின்றன.

கிளிநொச்சியைச் சேர்ந்த அன்ரனி குயின் ஜெயதேவி (வயது27), 5மாதக் குழந்தை ரஜிதா, திருகோணமலையைச் சேர்ந்த கிருபா (வயது 22), காங்கேசன்துறையைச் சேர்ந்த சோபா (வயது24) ஆகியோரே காணாமற்போனவர்களாவர்.

இந்தியாவில் அகதிகளாகத் தங்கியிருந்த இவர்கள் உட்பட 14 பேர் இந்திய மீன்பிடிப் படகொன்றை வாடகைக்கு அமர்த்தி இலங்கைக்குத் திரும்பிக்கொண்டிருந்தபோது கடற்கொந்தளிப்புக் காரணமாக படகு கவிழ்ந்ததிலேயே இந்த நால்வரும் காணாமற்போயினர். படகில் வந்த மற்றைய 10பேரும் வேறு படகுகளால் காப்பாற்றப்பட்டனர். (ஓ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# காரைநகருக்கு குடிதண்ணீர் வழங்க ஒரு கோடி ரூபா செலவில் திட்டம்!

## ஆரம்பித்து வைக்க அமைச்சர் வருகிறார்

யாழ்ப்பாணம்,மே28

காரைநகரில் நூறுலட்சம் ரூபா செலவில் குடிதண்ணீர் வழங்கும் திட்டம் ஒன்றை நகர பொதுவசதிகள் அமைச்சர் மொஹமட் மஹ்ரூப் நாளை புதன்கிழமை அங்குரார்ப்பணம் செய்துவைக்கவிருக்கின்றார்.

நாளை யாழ்ப்பாணம் வரும் அமைச்சர் குடாநாட்டில் மேற்கொள்ள வேண்டிய நீர்விநியோகத்திட்டங்கள், வடிகாலமைப்புத் திட்டங்கள் தொடர்பாக இங்குள்ள அதிகாரிகளுடன் ஆராயவிருக்கின்றார்.

குடாநாட்டில் நகர அபிவிருத்தி வசதிகளை மேற்கொள்ள எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரச அதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடுவார்.

பொதுமக்கள் நெருக்கமாக வாழும் குருநகர், பாஷையூர்ப் பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ள அமைச்சர் அங்குள்ள நிலைமைகளை நேரில் பார்வையிடுவார்.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கும் அமைச்சர் செல்லவிருக்கின்றார்.

(ஐ-3)

# இந்த ஆண்டின் இறுதிக்குள் 'திடீர்' பொதுத் தேர்தல்

## பிரதமர் ஆலோசனையாம்

கொழும்பு,மே28

இவ்வாண்டு டிசெம்பருக்கு முன் நாடாளுமன்றத்துக்கு திடீர் தேர்தல் நடத்துவது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆலோசித்து வருவதாக இணையத்தளச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

ஐ.தே.முன்னணி அரசை ஜனாதிபதி சந்திரிகா பதவி நீக்கம் செய்வதற்கு அல்லது கலைத்து விடுவதற்கு முன்னர் அவரது அதிகாரங்களைக் குறைத்துவிட மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதே திடீர்த்தேர்தல் நடத்தப்படுவதன் நோக்கமாகும் என்று கூறப்படுகிறது.

நாடாளுமன்றம் ஓராண்டைப் பூர்த்தி செய்த பின்னர் அதனைக் கலைத்துவிடும் அதிகாரம் அரசமைப்புச் சட்டத்தில் ஜனாதிபதிக்கு உண்டு. தற்போதைய நாடாளுமன்றம் அதன் ஓராண்டை எதிர்வரும் நவம்பர் மாதத்தில் பூர்த்திசெய்யும்.

சமாதான முயற்சிகள், நாடாளுமன்ற அதிகாரங்கள் போன்ற முக்கிய விடயங்களில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே பெரும் கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன. இதனால் இன்றைய அரசியல் நிலைமை உறுதியற்றதென பிரதமர் கருதுகிறார்.

இதற்கிடையே, ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைப்பதைத் தடுக்கும் அரசமைப்புச் சட்டத்திருத்தத்தைக் கொண்டுவருவதென அரசு உத்தேசித்திருக்கிறது.

## சட்டவிரோதமான முறையில்

# இத்தாலிக்குச் செல்லவிருந்த 69பேர் காலிப் பகுதியில் கைது!

## இந்தியர்கள் உட்பட

கொழும்பு,மே28

இலங்கையில் இருந்து இத்தாலிக்கு சட்டவிரோதமாகப் பயணம் மேற்கொள்ளவிருந்த 69பேர் காலிப் பகுதியில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் இந்தியர்களும் பாகிஸ்தானியர்களும் அடங்குவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கம்பஹா பிரதேச சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் லக்கி பீரிஸ் தலைமையிலான பொலீஸ் குழுவினர் காலி, ஹபராதுவ, ஹிக்கடுவ ஆகிய பகுதிகளில் நடத்திய திடீர் வேட்டையிலேயே இவர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர்.

பிடிபட்டவர்களில் 44பேர் பாகிஸ்தானியர்கள், 9பேர் இந்தியர்,16 பேர் இலங்கையர்.

இத்தாலி செல்வதற்காக இவர்கள் ஹோட்டல்களிலும் வீடுகளிலிலும் தங்கியிருந்தபொழுது கைது செய்யப்பட்டனர்.

(ஒ)

## அரசுக்கு எதிராக

# ஆர்ப்பாட்ட இயக்கம் நடத்த பொ.ஐ.முன்னணியினர் திட்டம்

கொழும்பு,மே28

தேர்தல் ஊழல்கள், பொருள்கள் மற்றும் எரிபொருள் விலைகள் உயர்வு ஆகியவற்றுக்கு அரசை கண்டித்து ஆர்ப்பாட்ட இயக்கம் ஒன்றை நடத்துவதென பொ.ஐ.முன்னணி தீர்மானித்திருக்கிறது.

பொ.ஐ.முன்னணி கட்சிகளின் தலைவர்கள் இன்று கூடி இதுதொடர்பாக ஆராய்வர். ஆர்ப்பாட்டத்துக்கான திகதி இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என்று முன்னணியின் பேச்சாளர் ஒருவர் கூறினார். சுதந்திரக்கட்சி, சமசமாஜ கட்சி, ஜே.வி.பி. கம்யூனிட்ஸ் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, தேச விமுக்தி மக்கள் கட்சி என்பன இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இணைந்து கொள்ளும் என்றும் அவர் சொன்னார்.

# முன்னாள் பொலீஸார் ஒருவர் உட்பட 4 கொள்ளையர் கைது!

## பாணந்துறைப் பகுதியில்

கொழும்பு,மே28

வங்கிக் கொள்ளைகள் உட்பட பல கொள்ளைகளுக்குக் காரணமாகவிருந்த கொள்ளைக்கோஷ்டி ஒன்று கைதுசெய்யப்பட்டது.

மேற்குப் பிராந்திய தென்பகுதிக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத்தின் பணிப்பின் பேரில் செயற்பட்ட விசேட பொலீஸ் குழு ஒன்று நடத்திய வேட்டையில் நால்வர் கொண்ட இக்கோஷ்டி பாணந்துறையில் வைத்துக் கைதுசெய்யப்பட்டது.

தலவத்துகொட வர்த்தக வங்கிக் கொள்ளை, மாலபே செலான் வங்கிக் கொள்ளை, நிட்டம்புவ நகைக் கடைக்கொள்ளை, பண்டாரகம பிரதேச சபையின் சம்பளப்பணம் கொள்ளை உட்பட பல கொள்ளைகளை இக்கோஷ்டி நடத்தியிருப்பது பொலீஸ் விசாரணைகளில் தெரிய வந்திருக்கிறது. கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் முன்னாள் பொலீஸ்காரர். முன்னாள் அமைச்சர் ஒருவரின் பாதுகாப்புப் பிரிவில் சேவையாற்றிய அவர், சில கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்டு சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தார்.

இக்கோஷ்டியைச் சேர்ந்த மேலும் சிலரைக் கைது செய்வதற்காக பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஒ)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,மே28

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளிடையில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள கால் இறுதி ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

**19 வயதுப் பிரிவு**

★ காலை 8 மணி முதல் - ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி எதிர் யாழ். சென் சாள்ஸ் ம.வி.

**17 வயதுப் பிரிவு**

★ யாழ். இந்துக் கல்லூரி எதிர் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.

**17 வயதுப் பிரிவு**

★ பிற்பகல் 2.30 மணி முதல் - கரவெட்டி தேவரயாளி இந்துக் கல்லூரி எதிர் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்.

(ஒ-86)

★ ★ ★

யாழ். கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையேயான தடகள விளையாட்டுப் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

(ஒ-86)

## நயினை ஆலய உற்சவம் குறித்து இன்று கூட்டம்

யாழ்ப்பாணம்,மே28

எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய திருவிழா தொடர்பான ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

அரச திணைக்களத் தலைவர்கள், தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொலீஸ் அதிகாரிகள் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுகின்றனர்.

குறிகாட்டுவான், நயினாதீவு ஆகிய இடங்களில் உள்ள இறங்குதுறைகளைப் புனரமைத்தல், உற்சவ காலத்தில் பொதுமக்கள் போக்குவரத்து என்பன உட்பட பல விடயங்கள் இந்த மாநாட்டில் ஆராயப்படவிருக்கின்றன.

(ஒ-3)

## பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,மே28

யாழ்.உயர்தர தொழில்நுட்ப நிறுவனத்தில் பரீட்சை ஆணையாளரால் நடத்தப்படும் இரு பரீட்சைகள் எதிர்வரும் 31ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா இரண்டாம், மூன்றாம் வருடங்கள்(பழைய பாடத்திட்டம்), உயர் தேசிய வர்த்தக டிப்ளோமா இரண்டாம், மூன்றாம் வருடங்கள்(பழைய பாடத்திட்டம்) ஆகிய கற்கை நெறிகளுக்கான பரீட்சைகளே இடம்பெறவுள்ளன.

(ஐ-3)

## வருமான வரிக்கு அதிகார சபை

கொழும்பு,மே28

தேசிய இறைவரித் திணைக்களம், சுங்கத் திணைக்களம் ஆகியவற்றை இணைத்து வருமான அதிகார சபையொன்றை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது.

இந்தப் புதிய அதிகார சபைக்கென செயலகக் கட்டடம் ஒன்றைக் கட்ட அமைச்சரவை 60 கோடி ரூபாவை ஒதுக்கியிருக்கிறது. அதிகார சபைக்குத் தேவையான நவீன உபகரணங்களைப் பெற்றுக்கொள்ள சர்வதேச நாணயச்சபையிடமிருந்து நிதியுதவி கிடைக்கும்.

(ஒ)

## வாசகர் திருமுகம்

# ஈழத்து நூல் கண்காட்சி நடத்துவதில் அவசரம் ஏன்?

யாழ்.பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை, ஈழத்து நூல் கண்காட்சி ஒன்றை நடத்தப்போவதாக 27.05.2002 உதயனில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்கள், வாசகர்கள், கல்விமான்கள், வியாபாரிகள் எல்லோருக்கும் மகிழ்ச்சி தரும் செய்தி இது.

சமூகத்தோடு இணைந்து செயற்படுகின்ற பல்கலைக்கழகம் என்று பெருமைப்பட்டுக்கொள்கின்ற யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினர் இப்படியான ஒரு கண்காட்சியை எப்பொழுதோ நடத்தியிருக்கவேண்டும். பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழாக் கொண்டாட்டங்களின்போது இப்படி ஒரு கண்காட்சியை நடத்தியிருக்கலாம். அப்பொழுது யாழ்.பல்கலைக்கழக சமூகத்தைச் சேர்ந்தவர்களது நூல்களைக்கொண்ட கண்காட்சி மட்டுமே நடத்தப்பட்டது. இந்தக் கண்காட்சியில் ஏனைய எழுத்தாளர்களை ஏன் புறக்கணித்தார்கள்?

அலட்சியமா? பயமா? பொறாமையா?

சரி, இப்பொழுதாவது அந்தக் கண்காட்சியை நடத்த முன்வந்திருக்கிறார்களே! அவர்களது முயற்சியை நாங்கள் பாராட்டத்தான் வேண்டும்!

நூல்களை ஒப்படைப்பதற்கு ஒரு வார காலம்தானே கொடுத்திருக்கிறார்கள்? ஏன் இந்த அவசரம்? கண்காட்சியை நடத்துவதற்கு இவ்வளவு காலம் தாமதித்தார்கள், நூல்களைப் பெறுவதற்கு, ஒரு மாத காலமாவது தாமதித்தால் என்ன?

கண்காட்சி தொடர்பான இந்தச் செய்தியை எத்தனைபேர் பார்த்திருப்பார்கள்? செய்தி எல்லோரையும் சென்றடைய எவ்வளவு காலம் எடுக்கும்? யாழ்ப்பாணத்து நூல்கள் முழுவதுமாவது வந்து சேருமா என்பது சந்தேகமே.

இது ஈழத்து நூல் கண்காட்சி அல்லவா? ஈழம் என்று எதைக் கருதுகிறார்கள்? தமிழீழத்தையா? இலங்கையையா?

இலங்கையிலுள்ள எல்லா எழுத்தாளர்களது முகவரிகளும் தமிழ்த்துறையினரிடம் இருக்கின்றனவா? அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகக் கடிதங்கள் எழுதியிருக்கிறார்களா? அப்படி அறிவிக்காமல் எல்லோரும் தமது நூல்களை அனுப்பிவைப்பார்கள் என்று எப்படி எதிர்பார்க்கலாம்?

ஒரு கடிதம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர குறைந்தது ஒரு வாரமாவது எடுக்கிறது. இந்த லட்சணத்தில் இலங்கையின் மூலை முடுக்குகளில் இருந்தெல்லாம் அனுப்பப்படுகின்ற நூல்கள், யாழ்.பல்கலைக்கழகத்திற்கு வந்துசேர எவ்வளவு காலம் எடுக்கும்?

கண்காட்சி தொடர்பான தகவலை எத்தனை பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள்? செய்தி இலங்கை முழுவதும் பரவ எவ்வளவு காலம் எடுக்கும்? சம்பந்தப்பட்டவர்கள் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும்!

அரைகுறைக் கண்காட்சி வெறும் கண்துடைப்பு! வைத்தால் முழுமையான கண்காட்சியாக வைக்கவேண்டும். அப்பொழுதுதான் தமிழ்த்துறையினரும் வேண்டிய தகவல்களைச் சரியாகப் பெற்றுக்கொள்ளலாம். ஏனையோரும் அக்கண்காட்சியால் நிச்சயமாகப் பயனடைவார்கள்!

*யாழ்ப்பாணம்.* **அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை.**

# வழக்குகள் அற்ற நிலையில் இந்து அறநிலையங்கள் இயங்கவேண்டும்

யாழ்ப்பாணத்தில் 2,600இற்கும் மேற்பட்ட சிறியதும் பெரியதுமான ஆலயங்கள் இருப்பதாகத் தெரிகிறது. எல்லாமே சைவ மக்களின் பொதுச் சொத்துக்கள். ஆனால், நூற்றுக்கணக்கில் ஆலய வழக்குகள் நீதிமன்றங்களில் தேங்கிக்கிடக்கின்றன என்று அறியும்போது வேதனையாகவிருக்கிறது.

சில ஆலயங்கள் ஆயுள் கால உரிமையளிக்கப்பட்ட தர்மகர்த்தாக்களால் பரிபாலிக்கப்படுகின்றன. மூவர் தர்மகர்த்தாவாகி இருவர் இறந்த நிலையில் தனியொருவரே ஆலயத்தை ஏதேச்சாதிகாரமாக நிர்வகிக்கின்ற நிலை ஏற்படுகின்றது. இக்காலத்தில், ஆலயத்தின் அசைவற்ற, அசையும் சொத்துக்கள் சுயதேவைக்காக எவரும் அறியாமல், நீதிமன்ற அனுமதியுமின்றி விற்கப்படுவதும் உண்டு. மேலும், தர்மகர்த்தாக்களின் வாரிசுகள், தமது தந்தையர் ஆயுள்காலத்துக்கு மட்டும் நிர்வகிக்க உரிமை பெற்றிருந்தனர் என்பதை அறியாது ஆலயங்கள் தமது குடும்பச் சொத்துக்கள் என உரிமை பாராட்டுகின்ற நிலைமையும் ஏற்படுகிறது. இன்றும் தர்மகர்த்தாக்கள், பரிபாலனத்தில் அக்கறை எடுக்காது சோர்ந்துவிடுகிற காலத்தில், சொத்துக்கள் பிறரால் சூறையாடப்படுகின்ற சந்தர்ப்பங்களும் உண்டு.

மேற்காட்டிய குறைகளை ஓரளவேனும் நிவர்த்தி செய்யும் பொருட்டு பல ஆலயங்களில் காலத்துக்குக் காலம் மக்களால் தெரியப்படுகின்ற பரிபாலன அல்லது நிர்வாக சபைகள் இருக்கின்றன. இங்கேயும் ஆணவமும் சுயநலமும் வெறியாட்டம் ஆடுவதும் சண்டை சச்சரவுகள் ஏற்படுவதும் தனியொருவரே எப்போதும் உட்கார்ந்துவிட முனைவதையும் காண முடிகிறது. எதிலும் சம்பந்தப்படாத ஒருவர் தனது பூட்டனாரோ, கொப்பாட்டனாரோ காணியைத் தர்மசாசனம் செய்தார் என்பதை உரக்கப்பேசி, உரிமை கொண்டாடுவதையும் பார்க்கலாம். காணி உள்ளவன் தர்மசாசனம் செய்கிறான். பொதுமக்கள் சேர்ந்து தமது பணத்தையும், உழைப்பையும் கொடுத்து ஆலயத்தை வளர்த்தெடுக்கிறார்கள். உறங்கிக் கிடந்த ஒருவர், எனது கொப்பாட்டன் காணி ஆகையால் அதை எனது கோயில் எனப்பேசி குழப்பியடிக்க முனைகிற மூடர் கூட்டத்தையும் பார்க்கலாம். ஆலயங்கள் வியாபாரமாகிவிட்டால் இது நடக்கவே செய்யும். வியப்பில்லை. ஆலயத்துக்குக் கொடுத்துவிட்ட பொருளைத் தனதெனப் பாராட்டுவது சட்டவிரோதம் மட்டுமல்ல பெரிய பாவமுமாகும்.

ஆலய பரிபாலனங்கள் சீராகவில்லாதவிடத்து ஏற்படுகிற அழிவுகளைத் தடுப்பதற்கு ஓர் அதிகாரம் பெற்ற, சட்டவலுவுள்ள ஒரு பொது அமைப்பு மேற்பார்வை செய்கிற நிலை அமையவேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினராக செல்வாக்கோடு விளங்கிய கோப்பாய் வன்னியசிங்கம் அவர்களும், திருமலை இராசவரோதயம் அவர்களும் சேர்ந்து அதிகாரம் உள்ள இந்து அறநிலையங்கள் மசோதா வரவேண்டும் எனக் குரல் கொடுத்தனர். வெள்ளை அறிக்கை தயாரிக்கப் பெற்று வெளிவந்தது. அதில், உயர் பதவியிலுள்ளவர் எச்சமயத்தவராயிருப்பினும், முக்கிய பங்கு வகிக்கத்தக்க குறையிருந்தது. அக்கால சுயநலமிக்க தர்மகர்த்தாக்களும் விரும்பாதபடியால் முயற்சி கைவிடப்பட்டது. அறநிலையங்கள் எனும்போது ஆலயங்கள் மட்டுமல்லாது மடங்கள், கிரியைகள் செய்யும் இடங்கள், சுடலைகள் போன்றவையும் அடங்கும்.

இப்போது, சுமார் 40வருடங்களின் பின்னர் ஆலய வழக்குகள் நூற்றுக்கணக்கில் தேங்கிக் கிடப்பதால், முறைப்பாடுகளை நீதிமன்றங்களுக்குப் போகாமல் தீர்ப்பதற்கு ஒரு தகுதி பெற்ற சபை அவசியம் தேவையென உணரப்படுகிறது. அதுபோதாது, தமிழ் நாட்டு இந்து அறநிலையங்கள் சட்டங்களை அடியொற்றி அவைகளைப் படித்து, எமக்குப் பொருத்தமான வகையில் ஓர் இந்து அறநிலையங்கள் மசோதா தயாரிக்கப்படவேண்டும் இது காலத்தின் தேவையுமாகும். ஆலய வருமானங்களை ஒருமுகப்படுத்தி எமது சமுதாய வளர்ச்சிக்கும் பயன்படுத்துகின்ற நிலை ஏற்படவேண்டும். யாழ்ப்பாணத்துக்கு 2,600 ஆலயங்கள் தேவைதானா என்பதைச் சிந்திக்கவேண்டியிருக்கிறது. பெட்டிக்கடைகள் போன்று ஆலயங்கள் முளைப்பதைத் தடுக்கவேண்டும்.

*கொழும்புத்துறை.* **மு.கனகசபை.**

உதயன்

# அரசாங்கத்தின் இலக்கு போரா, சமாதானமா?

அரசாங்கம் எங்கே செல்கிறது? அரசாங்கத்தின் உண்மையான நோக்கம் போரா, சமாதானமா?

அரசாங்கத்தைச் சந்தேகக்கண்கொண்டு நோக்கி அதனிடம் இந்தக் கேள்விகளைக் கேட்க வேண்டிய நிலைக்குத் தமிழ்மக்கள் தள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

நீண்டகாலம் நடந்துவந்த போரை நிறுத்தி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு பேச்சுமூலம் தீர்வுகண்டு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்குப் புலிகளுடன் அரசாங்கம் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொண்டது உண்மைதான்.

உடன்படிக்கை செய்து மூன்று மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது. உடன்படிக்கையை நடைமுறைப் படுத்துவதில் அரசாங்கம் ஆரம்பத்தில் காட்டிய அக்கறையும் வேகமும் துணிச்சலும் இப்போது இல்லை என்று தமிழீழ விடுதலைப் புலிகள் குறைகூறிக் கவலை தெரிவிக்கிறார்கள்.

பேச்சு ஆரம்பிப்பதற்கு வாய்ப்பாக வடக்கு - கிழக்கில் இன்னும் இயல்புநிலை ஏற்படுத்தப்படவில்லை. புரிந்துணர்வு உடன்படிக்கைப்படி காரியங்கள் நடைபெறவில்லை. புலிகள் மீதான தடை நீக்கப்படவில்லை. இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தும் விடயமும் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது.

'இந்தநிலையில் தமிழ்மக்களுக்குத் தொல்லை கொடுத்தும் புலிகளின் சுதந்திர நடமாட்டத்தில் குறுக்கிட்டும் புலிகளைச் சீண்டும் கைங்கரியத்திலும் அவர்களைப் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு மாறாகத் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடத்தூண்டும் முயற்சிகளிலும் முப்படைகளைச் சேர்ந்தவர்களும் ஈடுபட்டுவருகின்றனர்.

அரசாங்கம் யுத்தத்துக்கான ஆயத்தங்களைச் செய்வதில் தீவிரமாக இறங்கியுள்ளது.

பிரதமரும் அமைச்சர்களும் வெளிநாடுகளுக்குச் சென்று இலங்கை அரசு தவிர்க்கமுடியாமல் புலித் தடையை நீக்கினாலும் வெளிநாடுகள் தடையை நீக்கக்கூடாது என்று மன்றாடி வருகிறார்கள்.

உள்ளூரிலே இராணுவத்துக்கு ஆள்கள் சேர்க்கப் படுகிறார்கள். ஆயுத தளபாடங்கள் வெளிநாடுகளில் இருந்து தருவித்துக் குவிக்கப்படுகின்றன. இராணுவ முகாம்களும் கடற்படை முகாம்களும் பலப்படுத்தப் பட்டுவருகின்றன. குறிப்பாகத் திருகோணமலைக்கு வடக்கே முல்லைத்தீவு வரையுள்ள கரையோர முகாம்களைக் கடற்படை வெகுவாகப் பலப்படுத்திவருகிறது. மக்கள் அச்சம் காரணமாக அந்தப்பகுதிகளில் இருந்து வெளியேறிவருகிறார்கள்.

இவ்வளவுக்கும் மேலாக அரசாங்கம் இவ்வளவு காலமும் சும்மாகிடந்த திருகோணமலை எண்ணெய்க் குதங்களில் ஒரு தொகுதியை இந்தியாவுக்கு நீண்ட காலக் குத்தகைக்கு இப்போது கொடுக்கிறது.

அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்கிறது. இலங்கை வான்பரப்பையும் கடற் பரப்பையும் அமெரிக்கா விரும்பியபடி பயன்படுத்த அனுமதி அளிக்கிறது. அமெரிக்காவிடமிருந்து கண்காணிப்பு விமானங்கள் மற்றும் ஆயுத தளபாட உதவிகளைப் பெறுகிறது. விசேட பயிற்சி வசதிகளுக்கும் ஏற்பாடு செய்திருக்கிறது.

இவையெல்லாம் எதற்கு? சமாதானத் தேவைகளுக்கா? நிச்சயமாக இல்லை.

புலிகளுக்கு எரிச்சலை ஊட்டி அவர்களைப் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறிச் செயற்படவைத்து அதன்மூலம் சர்வதேச சமூகத்துக்கு அவர்களைப் போர்வெறியர்களாகக் காட்டுவதுதான் அரசின் திட்டம். இது தெளிவாகத் தெரிகிறது.

"படிப்பது புராணம் இடிப்பது சிவன் கோயிலை" என்பார்கள். அரசாங்கம் சமாதானத்தை உச்சாடனம் செய்துகொண்டு போர்முனைப்பில் ஈடுபட்டிருக்கிறது. அதற்கு வெளிநாடுகளையும் துணைக்கு அழைத்து இந்த நாட்டின் இறைமையைக் குழிதோண்டிப் புதைக்கிறது.

முழு நாட்டையுமே சுட்டெரித்துவந்த யுத்தத்துக்கு முடிவுகாண இதுவே கடைசிச் சந்தர்ப்பம். நோர்வேத் தரப்பின் அனுசரணையோடு இனப்பிரச்சினைக்கு அமைதியான வழியில் நிரந்தரத்தீர்வு ஒன்றைக் கண்டுவிடலாம் என்று இந்த நாட்டின் மூவின மக்களும் நம்புகின்றனர். பொதுத் தேர்தலிலும் அதற்குப்பின் நடந்த உள்ளூராட்சித் தேர்தல்களிலும் ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் கரங்களைப் பலப்படுத்த மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். அவை சமாதானத்துக்காக அளிக்கப்பட்ட வாக்குகள். விடுதலைப் புலிகளோடு நடத்தப்படும் சமாதான முயற்சிகளில் பிரதமர் ரணில் இன்னமும் ஊக்கத்துடன் செயற்பட மக்கள் தங்கள் ஆதரவை மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

இவை அனைத்தையும் கவனத்தில் எடுக்காமல் பிரதமர் ரணிலின் அரசு, போர்முனைப்பில் தீவிரம் காட்டுவது வியப்பையும் ஏமாற்றத்தையுமே தருகின்றது.

---

மீளக்குடியமர்ந்த பின்னரும்

# நிவாரண 'பெர்மிட்' பெறுவதற்கு தென்மராட்சி மக்கள் அலைச்சல்

தென்மராட்சி,மே28

தென்மராட்சி பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களில பலர் ஏப்ரல் மாதத்திற்குரிய நிவாரணப் 'பெர்மிட்'டினைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் மாத நடுப்பகுதியில் சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்த மக்கள் தத்தமது கிராம அலுவலர்களிடம் பதிவுகளை மேற்கொண்டிருந்தனர். எனினும் அவர்களால் ஏப்ரல் மாதத்திற்குரிய நிவாரணப் 'பெர்மிட்'டினை பெற்றுக்கொள்ள முடியவில்லை என்று கூறப்பட்டது.

இதனால் மீளக்குடியமர்ந்துள்ள பகுதி கிராம அலுவலரிடம் கடிதம் பெற்று, இடம்பெயர்ந்திருந்தபோது தங்கியிருந்த பிரதேச கிராம அலுவலரிடம் 'பெர்மிட்' பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகக் கவலை தெரிவிக்கப்பட்டது.

இதனால் தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் 'பெர்மிட்' பெறுவதற்காக தாம் தங்கியிருந்த இடங்களுக்கு அலைய வேண்டியுள்ளதாகவும் பொதுமக்கள் தரப்பில் கூறப்பட்டது.

(எ-117)

---

## நாட்டு நடப்பு

### பனை புலம்புகிறது

கொடும்பசி பஞ்சம் நீங்க
கூழ் பனாட்டு பிட்டு தந்தேன்
படுத்திடப் பாயும் தந்து
பருகிடக் கள்ளும் தந்தேன்
அடுத்து நீர் வீடுவேய
அழகுறு ஓலை தந்தேன்
தொடுத்த கொடும் போரினாலே
தொலைந்தது என்வாழ்வு அன்றோ
நடுப்பகலில் வெட்டி வீழ்த்தி
நாலு துண்டாகப் போட்டு
அடுக்கிறார் பங்கர் மேலே
ஆரெனக்கு உதவ வந்தார்?

- விகடகவி

---

# அடிப்படை வசதிகள் இல்லாமல் கைதடி முதியோர் இல்லம் அவதி

யாழ்ப்பாணம்,மே28

கைதடி முதியோர் இல்லத்தில் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் அங்குள்ள முதியோர்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இடம்பெயர்வு காரணமாக மூளாயில் இயங்கிவந்த இந்த முதியோர் இல்லம் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் புனர்வாழ்வு புனரமைச்சின் நிதி உதவியுடன் மீண்டும் சொந்த இடத்தில் இயங்கிவருவது தெரிந்ததே.

அங்கு தங்கியுள்ள முதியவர்களுக்குப் போதிய வசதிகள் இல்லை என்று கூறப்படுகிறது. தண்ணீர் வசதி இன்மை, மின்சாரம் வழங்கப்படாமை, தளபாட பற்றாக்குறை போன்ற பல்வேறு கஷ்ரங்களின் மத்தியிலேயே அவர்கள் அங்கு வாழ்ந்து வருகின்றனர்.

நோயாளரை மேலதிக சிகிச்சைக்காகவும் - கிளினிக்குகளுக்காகவும் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கான வாகன வசதி உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளது.

இவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மிகவிரைவில் ஏற்படுத்தப்படவேண்டும் என்று கைதடி முதியோர் இல்லப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

(ம-180)

---

கொள்கைக்காக வாழும் இனம் தமிழினம்

# வீரசாகசங்கள் படைக்கப்படும் இந்த மண்ணில் பூர்வீகக் கலைகளை வளர்ப்பதிலும் ஆர்வம் தேவை

## காரைநகர் சாகித்திய விழாவில் தமிழகப் பேராசிரியர் உரை

காரைநகர்,மே28

கொள்கைக்காக வாழும் இனம் தமிழினம். இதனை இந்த மண்ணில் தொடர்ந்து நடைபெற்றுவரும் உரிமைப் போராட்டங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

வீரசாகசங்கள் மூலம் புதிய வரலாறு படைக்கப்படும் இந்த மண்ணில் தமிழர்களின் பூர்வீகக் கலைகளை இனம் காணவும், அவற்றை வளர்த்தெடுக்கவும் ஆக்கபூர்வமான முயற்சிகள் எடுக கப்படவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் சென்னைப் பல்கலைக்கழக மெய்யியற்றுறைத் தலைவர் பேராசிரியர் இரா.கோபாலகிருஷ்ணன்.

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவு கலாசார சபை நடத்திய சாகித்தியவிழா நிகழ்வுகள் அண்மையில் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் நடைபெற்றன. இந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை மற்றும் நெடுந்தீவுப் பகுதிகளுக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பேராசிரியர் இரா.கோபாலகிருஷ்ணன் மேலும் தெரிவித்ததாவது:-

உலகத்திலேயே உயர்ந்த இனமாக வாழக்கூடிய இனம் தமிழினம். இந்த இனம் எங்கு சென்றாலும் தலைதூக்கி நிற்கும், எதற்கும் தாழ்ந்து விடாது, ஏனெனில் நம்முடைய தமிழ மொழி தெய்வீகப் பாடல்களை அதிகம் கொண்ட மொழியாகும்.

"ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற நிலைக்கு நாம உயர்ந்துகொண்டு இருக்கின்றோம். தமிழ் நாட்டிலே ஒரு சாபக் கேடாகக் காணப்படுவது சாதிப் பிரிவினை. இது அரசாங்கம் முதல் ஆண்டிவரை அனைவரையும் கொடுமைப்படுத்துவதாய் உள்ளது. அதைப் போக்குவதற்காக எல்லோரும் வாய்கிழிய பேசுகிறார்களே தவிர, அதனை நிறுத்துவதற்கு யாரும் முயற்சி எடுப்பதில்லை. ஆனால் இப்போது இலங்கையர் மத்தியிலே இது விடயத்தில் ஒரு எழுச்சி ஏற்படுவதைக் காணமுடிகின்றது.

நாம் எல்லாம் தமிழர்கள். தமிழால் ஒரே இனத்தவர்கள். தமிழ் இனத்தவர்கள் என்ற கொள்கையால் நாம் உயர்ந்தவர்கள். தமிழர்கள் சான்றோர்கள் என்ற மனப்பக்குவம் தற்போது சகல இடங்களிலும் தோன்றிக்கொண்டிருக்கின்றது. அதற்கு இந்த நாட்டில் இருந்து உத்வேகம் அங்கே வரவேண்டும் என நான் ஆசைப்படுகின்றேன் - என்றார்.

தமிழேந்தல் மா.க.ஈழவேந்தன் தனது உரையில்:-

தமிழர் வரலாறு இந்த நாட்டோடு பின்னிப்பிணைந்தது. இந்த நாட்டின் மூத்த இனம் தமிழினம். நிலைத்த இனம் தமிழினம். வாழ்விக்கின்ற இனம் தமிழினம். தமிழர்கள் இந்த நாட்டின் வந்தேறு குடிகளல்ல, நிலைத்த பேறுபெற்றவர்கள் அவர்கள் என வரலாற்று ஆசிரியர்கள் கூறியிருக்கின்றனர்.

சிங்களவருடைய முன்னோர் என வர்ணிக்கப்படும் விஜயன், தாயின் கருவில் உருவாவதற்கு முன்னரே, கோணேஸ்வரம், கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், தொண்டேஸ்வரம், நகுலேஸ்வரம் போன்ற கோயில்கள் எல்லாம் இலங்கையின் வடக்கு, கிழக்கு, வடமேல மாகாணங்களிலே வாழ்வுபெற்று, வளம் ஊட்டின. உலகத்து பெரு வணிகர்கள் எல்லோரும் இங்கு வந்து ஆலயங்களில் வழிபாடுகளை நிகழ்த்தியுள்ளனர்.

சேர்.போல் பீரிஸ் என்ற சிங்கள வரலாற்று ஆசிரியர் ஈழத்தின் இந்தப் பகுதி முழுவதும் தமிழருக்குரிய மண் என வலியுறுத்தி, அந்த மண்ணின் வளத்திற்கு அருள்வளத்தை ஊட்டும் வகையிலே ஐம்பெரும் கோயில்கள் எழுந்துள்ளன எனக் கூறியுள்ளார்.

இன்று எமது புராதன தலங்கள் எல்லாம் சிங்கள மயமாகி வருகின்றன. எமது தெய்வமான கதிரமலைக் கந்தனை இன்று 'கதிரகம தெய்யோ' எனப் பெயர்மாற்றிவிட்டார்கள். தமிழனையே சிங்களவனாக மாற்றமுயல்கின்ற இந்த அரசு அல்லது ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசும் கதிர்காமக் கந்தனை 'கதிரகம தெய்யோ' என மாற்றி செல்லக்கதிர்காமம் உட்பட பல பகுதிகளை நாம் வழிபடமுடியாத் நிலைக்கு உருவாக்கிவிட்டன. அவற்றை மாற்றி நாம் வழிபடும் வகையில் அமைச்சர் மகேஸ்வரன் அதனைச் செய்து தரவேண்டும். அதற்கு மக்கள் ஊக்கம் கொடுக்க வேண்டும் - என்றார்.

இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகெண்டு உரையாற்றிய இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தனது உரையில்:-

. பல்வேறு துறைகளைச் சார்ந்த கலைஞர்கள் இன்று கௌரவிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் கடந்த காலங்களில், தங்கள் இளம் வயதுகளிலே தமிழ் மொழிக்கும், சமயத்திற்கும், எங்கள் கலை, கலாசாரத்தைப் பேணுவதற்காக ஆற்றிய பணியை எடுத்துக்குகூறி கௌரவிக்கின்ற இதுபோன்ற பெருநிகழ்வுகள் ஊடாகத்தான் எதிர்காலத்தில் கலைஞர்கள் உருவாக்கப்படுவார்கள். எதிர்காலத்தில் இவர்கள் ஆற்றிய பணியை எடுத்துச் செல்லக்கூடிய நிலைக்கு இன்றைய விழா ஊன்றுகோலாக அமைந்துள்ளது.

எங்கள் ஊரிலே இவ்வாறான நிகழ்வுகள் கடந்த பல ஆண்டுகளாக நடைபெறவில்லை. இங்கு இடம்பெற்ற பல இராணுவ நடவடிக்கைகளால் 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துவிட்டனர். தற்போது 7 ஆயிரம் மக்களே இங்கு வாழ்கின்றனர். அடிப்படை வசதிகள் அற்ற, இராணுவ கெடுபிடிகளுக்கு மத்தியிலே எமது மக்கள் வாழ்க்கை நடத்துகின்றனர்.

இந்தப் பிரதேசத்தின் வளர்ச்சிக்காக என்னாலான அனைத்தையும் செய்கின்ற சந்தர்ப்பம் இந்த புதிய அரசாங்கத்திலே கிடைத்துள்ளது - என்றார்.

உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தனது உரையில்:-

தீவுப் பகுதிகளில் தமிழர்களின் பூர்வீகக் கலைகளை வளர்ப்பதில் ஆக்கபூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய முயற்சிகள் வெற்றி பெறுவதற்கு நிறைந்த பொருளாதார வளமும், வழிகாட்டுதல்களும் தேவை - என்றார்.

இந்நிகழ்வில் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தைச் சேர்ந்த 25இற்கு மேற்பட்ட கலைஞர்கள் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இரு அமர்வுகளாக நடைபெற்றன.

(எ-73)

---

## நாளை

வைகாசி 15
புதன்கிழமை
(29.05.2002)
திதி : திருதியை
பிற்பகல் 3.34 வரை.
நட்சத்திரம்: பூராடம்
பின்னிரவு 4.55 வரை.
சுபநேரம் : 4.22 - 5.52
ராகுகாலம்: 11.52 - 1.22
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

நல்லொழுக்கம் மட்டுமே புயலுக்கு அசையாமல், உறுதியாக நிற்கும் என்பது இறைவனின் சட்டம்.

# அறத்தை நிலைநாட்டுவதற்காக தம்மையே அர்ப்பணித்த தமிழ் மன்னர்கள்

**"பண்டைத் தமிழரின் பண்பாட்டு விழுமியங்களும் பரந்துபட்ட அறம் தழுவிய செயற்பாடுகளும்" என்ற தலைப்பில் வெளியாகிவரும் தொடர் கட்டுரையின் மற்றொரு பகுதி இன்று பிரசுரமாகின்றது.**

மனிதனுக்கு அறிவே சிறந்த தற்பாதுகாப்புக் கருவியாகும். அது அழிவு வராமல் காக்கும். உள்ளே பகைவர் புகுந்து அழிக்க முடியாமல் காக்கும். மனத்தை அலைபாயவிடாமல் நல்ல வழியில் செலுத்தும். எதிலும் உண்மையை விளக்கும். நுண் பொருள்களை துலககும். உயர்ந்தோரை நட்பாக்கும். வரக்கூடிய துன்பங்களை முன்னமே அறிந்து காக்கும். தற்காப்புக் கருவியாக உள்ள அறிவிற்குப் பகையாக ஒன்றுள்ளது. அதுதான் சினம் - கோபம் என்பதாகும்.

"தன்னைத்தான் காக்கின் சினங்காக்க, காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்" - (குறள்)

தன்னலம்கருதியே பெரும்பாலும் சினம் உண்டாகும். பொதுநலம் கருதியும் சினம் எழுதல் உண்டு. தீமையே உண்டாக்கும் சினம் பொதுநலம் கருதிய போது நன்மை விளைவித்தலும் உண்டு. ஓர் ஊரில்



கொள்ளையர் புகுந்து மக்களை வருத்தியது கேட்டு "அக்கொள்ளைக் கூட்டத்தைக் கண்டுபிடித்து என் கையால் தலை தறித்திடும் வரையில் உறங்கேன்" எனச் சினந்து கூறும் அவ்வூரவன் ஒருவனின் கடும்சினம் பொது நலம் கருதியதாகும். அது வஞ்சினம் எனப்படும்.

பண்டைத் தமிழகத்தை ஆட்சிபுரிந்த உணர்வுமிக்க தமிழ்வேந்தர் உயர்ந்த தலைவர்களாவர். அவரது அறம் வழுவா ஆட்சிக்கு எவரேனும் இடையூறு செய்ய முயனற போது கொதித்தெழுந்து வஞ்சினம் மொழிந்துள்ளனர்.

**நாக. சண்முகநாதபிள்ளை**

அவ்வாறு மொழிந்த சில வஞ்சினக் கூற்றுக்கள் பாட்டுருப் பெற்று இலக்கிய அவையில் வீற்றிருக்கின்றன. மூவேந்தரும் பாவேந்தராக விளங்கிய காலமது. அப்பாடல்களுள் சிறந்து விளங்குவன மூன்று. அவையாவன ஒல்லையூர் தந்த பூதப்பண்டியன் பாட்டு, பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் பாட்டு, சோழன் நலங்கிள்ளி பாட்டு என்பனவாகும். இப் பெருவேந்தர் பாடிய பாடல்களில் அவர் கொண்ட பேருணர்வு விளங்குகின்றது. இவ்வஞ்சினப் பாடல்கள் உள்ளத்து உணர்வு, மிடுதலைப் புலப்படுத்தும் பாடல்களாக இருப்பதால், பண்பாட்டை காலத்தமிழ் மக்களதும் அரசர்களதும் அறம்தழுவிய விழுமியங்களை அறிந்து அவர்தம் நாகரிகத்தையும், பண்பாட்டையும் தெளிவதற்கு மிகவும் உதவுகின்றன.

எடுத்துக்காட்டாகத் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனது உள்ளத்தே மிகுந்திருந்த உணர்வுகளைக் கூறலாம்.

"............பொருந்திய
என் நிழல் வாழ்நர் செல்நிழல் காணாது
கொடியன் எம் இறை எனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக;
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை,
புரப்போர் புன்கண் கூர
இரப் போர்க்கு ஈயா இன்மையான் உறவே" (புறம்72).

இப்பாடலில் "என் காவலில் உள்ள குடிகள் கலங்கிக் கண்ணீர் சொரிந்துவாடி என்னைக் கொடியவன் என்று பழி தூற்றும் நிலைமை உறுக" எனச் சீறினான். இவ்வஞ்சினக் கூற்றில், பகைவர்க்கு அஞ்சாத பேரரசன் - பாண்டிய வேந்தன் - குடிகளின் கண்ணீருக்கு அஞ்சும் அச்சம் புலனாகின்றது. வாளுக்கும் வேலுக்கும் அஞ்சாது நின்ற தமிழ் நெஞ்சம் கண்ணீர்ப் படைக்கு அஞ்சும் பெருந்தகைமையைக் காண்கின்றோம். இவ்வாறு "குடிதழீயிக் கோலோச்சி" நின்ற மன்னர்தம் திருடிகளைப் பண்டைத் தமிழகம் தழுவி நின்றது. நெடுஞ்செழியன் தன் நாட்டைப் புலவர் பாடவேண்டுமென்று விரும்பினான். புலவர், கண்ட நாட்டையெல்லாம் பாடுவாரல்லர். புலவர் பாடவேண்டுமாயின் அன்பும் அறமும் செறிந்த நாடாக அது விளங்கவேண்டும். அவ்வாறான ஒரு நாடாகத் தன் நாடு விளங்க வேண்டுமென விரும்பினான் நெடுஞ்செழியன். புலவர் பாடல் நிரம்புமாறு அன்பும் அறமும் விளங்கவல்ல நாடாகத் தன் நாட்டை ஓம்பி அப்புலவர் பெருமக்களை வரவேற்க

**இக்கட்டுரை பழந்தமிழ் இலக்கியங்களோடு ஒரு பயில் பண்பை ஏற்படுத்துவதற்கான முயற்சியாகும். திறமான புலமைகளை பண்டைய இலக்கியங்களில் தேடிச் சுவைக்கும் திறன் அருகிவரும் தற்காலக் கல்வியியற் போக்கில் ஓர் உயர்வான மீட்டலை இவை கொண்டுவரும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.**

வேண்டும் என்பதே அரசன் உள்ளத்தில் ததும்பிய உணர்வு. அதனால், தான் அறிந்த புலவர்களில் சிறந்தவராகிய மாங்குடி மருதனாரை உச்சிமேற் புகழ்ந்து போற்றினான். "மாங்குடி மருதன் தலைவன் ஆகுக" என்றான்.

அரசனைச் சார்ந்து வாழும் மாந்தர் அனைவரையும் காத்தல் அரசன் கடமையாகும். அவர்கள் அரசுக்கு அரணாக இருப்பர். வெளியூர்களிலிருந்தும் உள்ளூரிலிருந்தும் அரசனிடம் வந்து பொருள் இரப்போருமுண்டு. "அற்றார்க்கு ஒன்று ஈதல் அறம்" என்ற வகையில் அனைவரையும் காத்தல் அரசன் கடமையாகும். 'பகைவரை வெல்லவில்லையானால், என்னால் புரக்கபபடுவோர் துன்பப்படுமாறும், இரப்போர்க்கு இல்லையெனுமாறும், என் கடமையிலிருந்தும் தவறுவேனாக' எனக் கூறினான். உபகார குணமுடையவனுக்கு, தான் செய்ய வேண்டிய உதவிகளைப் பிறருக்குச் செய்யமுடியாமல் வருந்துவதும் வறுமையேயாகும். அரச வாழ்வே ஆயினும் ஈகை இல்லையேல் வறுமையேயாகும். எனவே குடிகள் கண்ணீர்விட்டு வருந்தாதவாறு காத்தல், புலவர் பாடுமாறு நாட்டைச் சிறப்புறச் செய்தல், தன்னைச் சார்ந்தவர்களை வறுமையுறாது வாழ்வித்தல் ஆகிய மூன்றும் நெடுஞ்செழியன் நெஞ்சத்தே நிமிர்ந்து நின்ற கோட்பாடுகளாகும்.

இதைவிட ஒழுக்கக் கோட்பாடுகளும் அரசர்களால் மதிக்கப்பட்டன. சோழன் நலங்கிள்ளி தக்க தலைவனாக விளங்கி உலகைக் காக்க விரும்பிய பேருணர்விற்கு அடிப்படையாய் அமைந்ததும், பூதப்பாண்டியன் புலமை மிக்கவரும் ஆண்மைமிக்கவருமாகிய தக்கோரைக் கேளிராகக் கூடி இனிது பழகி மகிழ்ந்ததும், தன் வாழ்க்கைத் துணைவியைப் பிரியாது வாழ்ந்த வாழ்வை விழுமியதாகப் போற்றி, அவளைப் பிரிந்து வாழும் வாழ்வும், பிறரொடு கூடி வாழும் கற்பிலா வாழ்வும் பகைவர்க்குத் தோற்றிடும் தோல்வியிலும் கொடியது என்று உணர்த்தியதும் எல்லாம் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்றதை அடிப்படையாகக் கொண்டதேயாகும்.

தமிழ்ப் பெருவேந்தர் பாடிய பாடல்கள் சினம் பொங்கக் கூறியவை ஆயினும், உண்மைக் கொள்கைகளை உணர்வு ததும்ப விளக்குவனவாகும். அந்த வகையில் வஞ்சினம் மொழிதலாக அமைந்த பாடல்களில், காதல்மிக்க கற்பு வாழ்வினையும், அறம் திறம்பாச் செங்கோல் முறையினையும், குடிகளின் கண்ணீர் காணாக காவல் நெறியினையும், புலவர் பாட விரும்பும் பெருநிலையினையும், வறுமையைத் துரத்த விரும்பும் வண்மையினையும் உயர்ந்தனவாகப் போற்றிய சிறப்பை தமிழ் நெஞ்சங்கள் கண்டு இன்புறலாம். இவையே பண்டைத் தமிழரின் பண்பாட்டு விழுமியங்களாகவும் விளங்கின. இவை அருகிப் போகாமல் பெருகிப் பிரவாகிக்கத் தமிழராகிய நாம் பாடுபடுவோமாகுக.

---

வீடுகளைப் பார்வையிட செல்வதற்கு

# பச்சிலைப்பள்ளி மக்கள் பாஸ் பெற 2மைல் பயணம்

யுத்தத்தினால் பேரழிவுகளைச் சந்தித்த பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேசமான இத்தாவில், கச்சார் வெளி, முகமாலை கிளாலி, இந்திராபுரம், செல்வபுரம், அரசர்கேணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது வீடுகளைப் பார்வையிடச் செல்வதற்கு இரண்டு மைல்களுக்கு அப்பால் உள்ள பளைப் பகுதிக்குச் சென்று பாஸ் பெறவேண்டியுள்ளது.

பளைப் பிரதேச மக்களுக்கென தனியான பாஸ் அலுவலகம் உள்ள போதிலும், பளை நகர்ப் பகுதியூடாகச் செல்லும் மக்களுடன், பச்சிலைப்பள்ளி மேற்குப் பகுதி மக்களும் சேர்ந்து பாஸ் பெறுவதற்கு நிற்பதால் ஒரு மணித்தியாலத்திற்கு மேல் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேச மக்களின் நலன் கருதி முகமாலை அல்லது இத்தாவில் பகுதியில் பாஸ் அலுவலகம் திறக்கப்படவேண்டுமென இப்பிரதேச மக்கள் நலன்காக்கும் ஒன்றியத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(எ-117)

## பாதாள உலகத் தலைவர் சுட்டுக்கொலை

பாதாள உலகக் கோஷ்டியின் தலைவர் எனக் கருதப்படும் கடுவெல வசந்தவும் மேலும் 6பேரும் கடுவெலவில் நேற்றுமுன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்தப் படுகொலைகளுக்கு இராணுவத்திலிருந்து விலகிச் சென்றவர்களே காரணமாக இருக்கலாம் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

மற்றுமொரு நபர் கடும் காயங்களுடன் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ம-6)


# கணக்காளர் தேவை

பில் போடவும், கணக்கு எழுதக்கூடிய முன்னனுபவமும் நற்பண்புமுள்ள கணக்காளர் (ஆண்) தேவை. ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவராக இருப்பதோடு, இரத்த உறவினர் அல்லாத இரு வியாபார பிரமுகர்களின் சிபாரிசுடன் உங்கள் விண்ணப்பங்கள் அனைத்தும் சுய கையெழுத்தில் இருத்தல் வேண்டும். திறமைக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும். வார நாள்களில் மாலை 3.00 - 4.00 வரை நேரில் தொடர்புகொள்ளவும்.

**சிவா நறுமணப் பூங்கா**
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.: 2567 (4251)


# கேள்விப் பத்திரம் கோரல்

**நீர்வேலி, ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோயில் தேர்த் தரிப்பிட இருபக்க கேற் வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள கோரப்படுகின்றன. உயரம் 26 அடி; அகலம் 22 அடி. விண்ணப்பிக்க விரும்புவோர் 15.06.2002ஆம் திகதிக்கு முன்னர் கேள்விப் பத்திரங்களைச் செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்.**

*குறிப்பு:*
1. முன்னர் வேலை செய்த கோயில் பெயர்களையும் விண்ணப்பத்தில் குறிப்பிடவும்.
2. முன்னர் பாவித்த தகரங்களும் 09.06.2002ஆம் திகதி காலை 10 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும் என்பதையும் அறியத்தருகிறோம்.

ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோயில்,
நீர்வேலி. (4246)
**ச.க.முருகையா**
**செயலாளர்.**

# கண்ணீர் அஞ்சலி

## தனபாலசிங்கம் தயாபரன்



27.05.2002 அன்று அகால மரணமடைந்த தனபாலசிங்கம் தயாபரன் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*மணல்தறை வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.* (4248)
- நண்பர்கள்.

# மரண அறிவித்தல்

## திருமதி சங்கரப்பிள்ளை உமாதேவி

காரைநகர், இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சங்கரப்பிள்ளை உமாதேவி அவர்கள் நேற்று (27.05.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சங்கரப்பிள்ளை (நாவலப்பிட்டி முன்னாள் வர்த்தகரும் அரச ஒப்பந்தகாரரும்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சண்முகம் (ஆசிரியர்) தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சண்முகம் கணபதிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகளும் அருளாம்பிகை, காலஞ்சென்ற செல்வராணி, இராசையா ஆகியோரின் அருமைச் சகோதரியும், சிவசோதி, பரமேஸ்வரி, நகுலேஸ்வரி, சந்திரதாசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஞானம்பிகை, அருளானந்தம், கமலக்கண்ணன் ஆகியோரின் அன்பு மாமியாரும் அருட்குமரன், ஜனனி, ரமேஸ்குமார், அருள்வதனா, அருள்றஞ்சன், அருள்ராசா, செந்தில் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2002) செவ்வாய்க்கிழமை பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இடைப்பிட்டி,*
*காரைநகர்.* (4249)
*தகவல்:*
*க.சங்கரப்பிள்ளை*
*(கணவர்)*

**அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபை**
**சைவக் குருமார் பயிற்சிக் கல்லூரி**

சிவாச்சாரிய மாணவர்களுக்கும் குருமார்களுக்குமான பயிற்சிக் கருத்தரங்குத் தொடர் - 2

*இடம்:* **வல்வெட்டி சனசமூக நிலைய மண்டபம், வல்வெட்டி.**

*காலம்:* **29, 30.05.2002 (புதன், வியாழன்)**
**காலை 9.00 மணிமுதல் 12.00 மணிவரை.**
**மாலை 1.30 மணிமுதல் 4.00 மணிவரை.**

*கௌரவ விருந்தினர்கள்:*
**சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர்**
(மேற்படி சபை போஷகர்)
**சிவத்திரு.து.ஜெகநாதன் ஐயா**
(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை)

அனைத்து சிவாச்சாரியார்களும், சிவாச்சாரிய மாணவர்களும் கலந்து பயன்பெற்றுக்கொள்ளவும்.

**சிவஸ்ரீ சி.கிருபாகரக் குருக்கள்,**
தலைவர்,
பயிற்சிக் கல்லூரி செயற்குழு. (4250)
**சிவஸ்ரீ அ.நடராஜக் குருக்கள்**
அதிபர்.

## திருஞானசம்பந்தர் குருபூசை இன்று

யாழ்ப்பாணம்,மே28

யாழ்.சைவ பரிபாலன சபை நடத்தும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசைநிகழ்வுகள் இன்று காலை 10.30 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

யாழ்.இந்துக்கல்லூரியின் இந்து மன்றத்தினின் அனுசரணையுடன் குருபூசை நிகழ்வுகள் இடம்பெறும்.


(எ)


# விற்பனைக்கு


**Computer With Multi Media**
**விற்பனைக்குண்டு.**

*தொடர்பு:*
24, மருதடி லேன்,
யாழ்ப்பாணம். (4230)


## தென்கொரிய மைதானங்கள்




புடின் ஏஷியன் ஸ்ரேடியம். 55,982 இருக்கை வசதி கொண்டது. 2001 ஜுலையில் கட்டி முடிக்கப்பட்டது.



டெகு ஸ்ரேடியம். 68.014 இருக்கை வசதி கொண்டது. 2001 மேயில் கட்டி முடிக்கப்பட்டது.




ஜி ஆன் ஜு ஸ்ரேடியம். 42.391 இருக்கை வசதி கொண்டது. 2001 செப்ரெம்பரில் கட்டி முடிக்கப்பட்டது.




ஜிஃயிவிவொ ஸ்ரேடியம். 42.256 இருக்கை வசதி கொண்டது. 2001 டிசெம்பரில் கட்டி முடிக்கப்பட்டது.



சியோல் ஸ்ரேடியம். 63.361 இருக்கை வசதி கொண்டது. 2001 டிசெம்பரில் கட்டி முடிக்கப்பட்டது.



சுவோன் ஸ்ரேடியம். 43.188 இருக்கை வசதி கொண்டது. 2001 மேயில் கட்டி முடிக்கப்பட்டது.



உல்சன் ஸ்ரேடியம். 43.550 இருக்கை வசதி கொண்டது. 2001 மேயில் கட்டி முடிக்கப்பட்டது.

# பங்குபற்றும் நாடுகள்

| Group A | Group B | Group C | Group D |
|---|---|---|---|
| செனகல் | தென்னாபிரிக்கா | சீனா | தென்கொரியா |
| உருகுவே | பரகுவே | பிரேசில் | அமெரிக்கா |
| டென்மார்க் | ஸ்லோவாக்கியா | கோஸ்டாரிகா | போலந்து |
| பிரான்ஸ் | ஸ்பெயின் | துருக்கி | போர்த்துக்கல் |

| Group E | Group F | Group G | Group H |
|---|---|---|---|
| சவூதிஅரேபியா | நைஜீரியா | மெக்சிக்கோ | ஜப்பான் |
| கேமரூன் | பிரிட்டன் | ஈகுவடோர் | டுனிஷியா |
| ஜேர்மனி | ஆஜென்ரீனா | குரோஷியா | பெல்ஜியம் |
| அயர்லாந்து | சுவீடன் | இத்தாலி | ரஷ்யா |

## உலகின் கோலாகலத் திருவிழா இன்னும் மூன்றே நாள்களில்!

உலகின் கோலாகலத் திருவிழாவான உலக உதைபந்தாட்டப் போட்டிகள் இன்னும் மூன்று நாள்களில் ஆரம்பமாக உள்ளன. இத்தருணத்தில் உலகின் பல கோடிக்கணக் கான உதைபந்தாட்ட ரசிகர்களின் பார்வை ஆசியாவை நோக்கித் திரும்பியுள்ளது.

உலக உதைபந்தாட்டப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டு 70 ஆண்டுகள் கடந்த நிலையில் முதற்தடவையாக இப்போட்டிகள் ஆசிய நாடுகளில் நடக்கின்றன. ஜப்பானும் தென்கொரியாவும் இணைந்து இப்போட்டிகளை நடத்துகின்றன.

31ஆம் திகதி தென்கொரியத் தலைநகர் சியோலில் முதலாவது போட்டி ஆரம்பமாகும். தொடர்ந்து ஒருமாத காலத்துக்குப் போட்டிகள் இடம்பெறும். இதற்காக சியோல் விழாக்கோலம் பூண்டுள்ளது. இந்த வாரத்திலிருந்து அங்கு வானவேடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன.

உலகெங்கிருந்தும் ரசிகர்கள் இந்தக் கோலாகலத் திருவிழாவைத் தொலைக்காட்சியில் கண்டுகளிக்கும் வகையில் அதிநவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய ஒளிபரப்பு நிலையம் ஒன்று சியோலில் அமைக்கப்பட்டுள்ளது.

உலகமே ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் இப்போட்டியின் ஆரம்ப ஆட்டத்தில் தற்போதைய உலகச் சம்பியனான பிரான்ஸ் அணியுடன் செனிகல் அணி மோதும்.

இந்த உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளின் வரலாற்றை ஒருமுறை திரும் பிப் பார்ப்போமா?

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் முதன்முதலாக 1930 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன. 1904 இல் உலக உதைபந்தாட்டச் சம்மேளனம் உருவாக்கப்பட்ட போதி லும் உதைபந்தாட்டமானது 1924 ஆம் ஆண்டிலேயே மிகவும் பிரபலமானது. 1924ஆம் ஆண்டு உதைபந்தாட்டம் ஒலிம்பிக் போட்டிகளில் சேர்க்கப்பட்டது. உலகிலுள்ள பல்வேறு நாடுகளின் அணிகள் ஒன்றோடு ஒன்று நேரடியாக மோதியது இந்த ஒலிம்பிக் போட்டியிலேயே ஆகும். முடிவில் உருகுவே அணி ஒலிம்பிக் தங்கப்பதக்கத்தை சுவீகரித்துக்கொண்டது.

26-05-1928 அன்று நெதர்லாந்தில் அம்ஸ்ரடாம் நகரில் கூடிய உலக கால்பந்துச் சம்மேளனம் உதைபந்தாட்டப் போட்டிகள் தொடர்பாக புதிய விதிகளை அறிமுகப்படுத்தியது. அதன்பின்னர் 1929 இல் உலக கால்பந்து சம்மேளனத்தின் உல கக்கிண்ணப் போட்டிகள் என இது அழைக்கப்பட்டது.

முதலாவது உலகக்கிண்ணத்திற்கான போட்டிகளை உருகுவே நாட்டில் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கு இருகாரணங்கள் இருந்தன. உருகுவே அணியே ஒலிம்பிக் கால்பந்து போட்டியில் வெற்றிபெற்றிருந்தது. இரண்டாவது காரணம் உருகுவே நாடு சுதந்திரத்தைப்பெற்ற நூற்றாண்டு விழாவை அந்த ஆண்டு(1930) கொண்டா டவிருந்தது.

உலகக்கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றுவதை பெரும் பாக்கியம் எனப் பல நாடுகள் கருதினாலும் அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடந்து தென் அமெரிக்க நாடான உருகு வேக்குச் செல்வது பல ஐரோப்பிய நாடுகளுக்கு பெரும் பிரச்சினையாகத் தோன்றியது.

அப்போது(1930) தற்போதுள்ளது போல் நவீன விமானப் போக்குவரத்துச் சேவைகள் இருக்கவில்லை. கடல்வழியாகவே அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடக்கவேண்டியிருந்தது. மேலும் கப்பல்களில் பிரயாணம் செய்வதாயின் பயணத்தை நேர அட்டவணைப்படுத்த முடி யாதிருந்தது.

இதனால் பல ஐரோப்பிய நாடுகள் போட்டிகளில் பங்குபற்ற மறுத்தன. எவ்வாறாயினும் உலக கால்பந்துச் சம்மேளனத்தின் தலைவரான ஜுலியஸ் ரிமெட்கோவின் முயற்சியால் பெல் ஜியம், பிரான்ஸ், யுகோஸ்லாவியா மற்றும் ருமேனிய அணிகள் போட்டிகளில் பங்குபற்றின.

முதல் சுற்றுப் போட்டிகளில் மொத்தம் 13 அணிகள் பங்குபற்றின. மிகவும் உயர்ந்த தரத்திலான போட்டிகள் இடம்பெற்றன. இறுதிப் போட்டியில் ஆஜன்டீனா மற்றும் உருகுவே அணிகள் மோதின. 4-2 கோல் கணக்கில் உருகுவே அணி வென்று முதலாவது உலக உதைபந்தாட்டக் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

அந்தப் போட்டித் தொடரில் எந்தவொரு போட்டியிலும் தோல்வியுறாது உருகுவே அணி சாதனை படைத்தது.

முதலாவது உலகக் கிண்ணப் போட்டிகளின்போது தகுதி காண் போட்டிகள் இடம்பெறவில்லை. பங்குபற்றிய அனைத்து அணி களுக்கும் நேரடியாகவே இறுதிப் போட்டியில் பங்கு பற்ற வாய்ப்புக்கள் இருந் தன. போட்டிகள் அனைத்தும் உருகுவேயில் மொன்டெ விடோ நகரிலுள்ள விளை யாட்டரங்கில் நடைபெற் றன.

இவ்வாறு ஆரம்பிக்கப் பட்ட உலகக் கிண்ணப் போட்டிகளில் இம்முறை 32 நாடுகள் பங்குபற்று கின்றன. 2 ஆண்டுகளாக 198 நாடுகளுக் கிடை யில் தகுதிகாண் போட்டிகள் நடைபெற்றன.

2ஆவது உலக யுத்தம் இடம் பெற்ற வேளையில் உலகக் கிண்ணப் போட்டிகள் இடம்பெற வில்லை. இதன் காரணமாக 1938ஆம் ஆண்டுக்குப் பின்னர் 1950ஆம் ஆண்டி லேயே மீண்டும் போட்டிகள் இடம்பெற்றன. ஆரம்பிக் கப்பட்ட 72 ஆண்டு வரலாற்றில் இதுவரை 16 போட்டிகளே இடம் பெற்றுள்ளன. இந்தப் 16 போட்டிகளிலும் 7 நாடுகள் மட்டுமே இது வரை உலகக் கிண்ணத் தைச் சுவீகரித்துள்ளன. இறுதிப் போட்டிகளில் இதுவரை 11 நாடுகள் மட்டுமே கலந்துகொண்டுள்ளன. உலகக் கிண்ணத்தை இதுவரை சுவீகரித்த நாடுகள் ஐரோப்பா மற்றும் தென்அமெரிக்க கண்டங்களைச் சேர்ந்த நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது. ☆

தயாரிப்பு:
கனிமொழி - ஆகாஷ்

## ஜப்பானிய மைதானங்கள்




கோபே ஸ்ரேடியம். 42.000 இருக்கை வசதி கொண்டது. 2001 ஒக்ரோபரில் கட்டிமுடிக்கப்பட்டது.



நீகிடா ஸ்ரேடியம். 42.300 இருக்கை வசதி கொண்டது. 2001 மார்ச்சில் கட்டிமுடிக்கப்பட்டது.



ஒய்டா ஸ்ரேடியம். 43.000 இருக்கை வசதி கொண்டது. 2001 மார்ச்சில் கட்டிமுடிக்கப்பட்டது.



சைத்மா ஸ்ரேடியம் 63.000 இருக்கை வசதி கொண்டது. 2001 ஜுலையில் கட்டிமுடிக்கப்பட்டது.



சப்பாரோ ஸ்ரேடியம். 42.000 இருக்கை வசதி கொண்டது. 2001 மேயில் கட்டிமுடிக்கப்பட்டது.



யோககாமா ஸ்ரேடியம். 70.000 இருக்கை வசதி கொண்டது. 2001 மார்ச்சில் கட்டிமுடிக்கப்பட்டது.



# ஆலயங்களில் மிருகபலியைத் தடைசெய்ய ஆக்கபூர்வமான முயற்சிகள் தேவை

**'ஆலயங்களில் மிருகபலி' என்ற தலைப்பில் 26.04.2002 ஆம் திகதிய இந்து சாதனம் பத்திரிகையில் வெளியான ஆசிரியர் தலையங்கம் இங்கு மறுபிரசுரமாகிறது.**

இந்து ஆலயங்கள் எனக் கூறிக் கொள்ளப்படும் சில இடங்களில் இன்னும் மிருகபலி நடைபெற்று வருகிறது. மிருகபலி கைவிடப்பட்டிருந்த சில இந்து ஆலயங்களில் அது மீண்டும் தலைகாட்டுகிறது. இவ்வாறு நடைபெறும் மிருகபலி பெரும்பாலும் வியாபார நோக்கிலேயே நடைபெறுகிறது. 'இந்து சமய நிகழ்வு' எனக் கூறிக்கொண்டு இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான - சமய சம்பந்தமற்ற - செயற்பாடுகள் தொடர்வதையிட்டு இந்துசமய அபிமானிகள் விசனம் அடைந்துள்ளனர். இந்த விடயத்தில்தானும் இந்து சமயத் தலைவர்கள் எனப்படுவோரும், இந்துசமய நிறுவனங்களும் ஒன்றிணைந்து தீவிரமான - ஆக்கபூர்வமான - செயற்பாடுகளில் ஈடுபடமுடியாதா என மக்கள் வினா எழுப்புகின்றனர்.

இந்து சமய நிறுவனங்கள் எனப்படுபவையும், சமயத் தலைவர்கள் எனப்படுவோரும் தம்முள் போட்டி போட்டுக்கொள்வதையும், அர்த்தமற்ற விழாக்கள் நடத்துவதையும், 'பட்டமளிப்பு' போன்ற பரிகாசத்தனமான செயல்களையும் விடுத்து சமய வளர்ச்சிக்கான அடிமட்ட நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

குடாநாட்டில் சில ஆலயங்கள் தம்மைச் 'சைவ ஆலயங்கள்' என அழைத்துக்கொண்டு அங்கு ஆடு, கோழி போன்ற உயிரினங்களைப் பலியிடும் அருவருக்கத்தக்க படுபாதகச் செயல் நடைபெறுவது சைவ மக்கள் மத்தியில் மிகுந்த விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான பாதகச்செயல்களில் ஈடுபடுவோர் தம்மைச் சைவர்கள் என அழைத்துக் கொள்ள அருகதையற்றவர்கள்.

உயிர்க்கொலை சைவசமயக் கோட்பாடுகளுக்கு முரணானது. அன்பை அடிப்படையாகக் கொண்ட சைவ சமயத்தில் இக்கொடுஞ் செயலுக்கு இடமில்லை. சைவ ஆலயங்களிலோ, பன்னிரு திருமுறைகளிலோ, பதினான்கு சித்தாந்த சாஸ்திரங்களிலோ உயிர்ப் பலி கூறப்படவில்லை. மாறாக உயிர்க் கொலையையும், புலாலுணவையும் சைவத் திருநூல்கள் வன்மையாகக் கண்டிக்கின்றன. இது பற்றி அதிகம் ஆராயவேண்டியதில்லை. புலால் தவிர்ந்த (சுத்த) உணவை சைவச் சாப்பாடு எனவும், சுத்தஉணவு உண போரை சைவ உணவாளர், சைவர் எனவும் அழைக்கும் உலக நடைமுறையொன்றை சைவசமயம் சைவ உணவு தவிர்ந்த வேறெதனையும் அனுமதிக்கவில்லை என்பதற்கான தெளிவான சான்று

'அன்பே சிவம்' என்ற தாரக மந்திரத்தை அடிப்படையாகக் கொண்டது சைவசமயம்.

*"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்*
*அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே"*

என்கிறது தமிழ் சைவாகமம் எனப்படும் திருமந்திரம்.

[illegible] என்ற போர்வையில் கசாப் புக்கடை நடததும் ஈனர்கள் தமது அநாகரிகச் செயலுக்குச் சமயத்தைப் பாதுகாப்பு போர்வையாக அணிந்து கொள்வதற்காக தாம் இந்துக்கள்; இந்துசமயத்தில் உயிர்ப்பலி அனுமதிக்கப்பட்டிருக்கிறது என வாதிடுவர். இதில் எவ்வித உண்மையும் இல்லை.

ஹிம்சை என்பது எவன் துன்பப் படுகிறானோ அவனே ஹிந்து என அழைக்கப்படுகிறான். இதனை ஐயாயிரமாண்டு பழைமை வாய்ந்த உபநிடதம் ஒன்று மிகத் தெளிவாகக் கூறுகிறது.

*"ஹிம் ஸாமாய தூய தேயஸ ஸ ஹிந்து ரீதய பீதியதே"*

அதாவது பிறவுயிர் துன்பப்படுவதைக்கண்டு துன்பப்படுபவனே இந்து. ஆகவே, சைவசமயம் மட்டுமல்ல இந்து சமயத்தின் அனைத்துப் பிரிவுகளுமே அன்பை - பிறவுயிர்களுக்கு தீங்கிழைக்காத பண்பை - அடிப்படையாகக் கொண்டவையே, அதாவது இந்து சமயத்தின் எந்தப் பிரிவிலும் சரி இறைவன் சந்நிதியில் மட்டுமல்ல வேறெங்குதானும் உயிர்களை பலியிட அனுமதிக்கப்படவில்லை என்பது தெளிவு.

சமய வரம்பு கடந்து தமிழர்கள் என்ற நிலையில் நின்று நோக்கினாலும் ஆலயங்களில் மட்டுமன்றி வேறு எவ்விடங்களில்தானும் உயிர்ப்பலியை நியாயப்படுத்த முடியாது. திருக்குறளைத் தமிழில் உள்ள அதிசிறந்த நூலக - உலகம் முழுவதற்கும் ஏற்புடைய 'உலகப் பொதுமறை' எனப் போற்றி பெருமை பேசாத தமிழன் எவனுமில்லை. அந்தத் திருக்குறளில் 'கொல்லாமை', "புலான் மறுத்தல்" என்ற தலைப்பில் இரு அதிகாரங்களையே வகுத்தளித்துள்ளார் திருவள்ளுவர் நாயனார்.

தன்னுயிர் போகவேண்டிய நிலை ஏற்படினும், பிறிதோர் இன்னுயிரை அதன் உடம்பிலிருந்து நீக்கும் தொழிலைச் செய்யாதே என வலியுறுத்திக் கூறுகிறார் பொய்யா மொழியார்.

*"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான் பிறிது இன்னுயிர் நீங்கும் வினை"*

கொல்லாமையை மட்டுமல்ல; புலால் உண்ணாமையையும் வலியுறுத்த வள்ளுவர் தவறவில்லை. கொல்லாதவனையும், புலால் உண்ணாதவனையும் மன்னுயிர்கள் இரு கைகூப்பித் தொழும் என்கிறார்.

*"கொல்லான் புலாலை மறுத் தானை கைகூப்பி எல்லாவுயிரும் தொழும்"*

"நாம் கொலை செய்வதில்லை; யாரோ கொலைசெய்த உயிரின் ஊனை விலைக்கு வாங்கி உண்கிறோம். அது பாவமில்லை" என விதண்டாவாதம் பேசுவார்களுக்கும் வள்ளுவர் சாட்டையடி கொடுத்துள்ளார்.

*"தினை பொருட்டாற் கொல்லாது உலகெனின் யாரும் விலைப் பொருட்டாற் ஊன் தருவார் இல்"*

ஆகவே, சைவர்கள் - இந்துக்கள் மட்டுமன்றி தமிழ் மறையாம் திருக்குறள் காட்டிய வழியில் நடக்க வேண்டுமென கருதுபவர்களும் ஹிம்சையில் ஈடுபட இடமில்லை. எமது நெறி சைவநெறி; அது அஹிம்சை - அன்பு நெறி இவ்வாறான சமயத்தின் பெயரால், உயிருக்குயிராய் விளங்கும் இறைவன் சந்நிதியில் மிருகங்களைப் பலியிடுவது எவ்வளவு கொடிய செயல்.

இக்கொடுமையை நிறுத்த அரும்பாடுபட்டவர் சைவப்பெரியார் சிவபாத சுந்தரம்பிள்ளை அவர்கள். அவரது முயற்சியால் சுழிபுரம் பகுதியில் பல கோயில்களில் இவ்வழக்கம் ஒழிக்கப்பட்டது.

அவர் இதனை ஒழிக்க அந்தந்தக் கிராமத்தைச் சேர்ந்த தனது மாணவ[illegible]நல்ல முறையில் உபயோகி[illegible]ண்டார். அவர் பின் இவ்விடயத்தில் இதயசுத்தியுடன் எவரும் செயற்பட்டதாகக் கூறுவதற்கில்லை. சைவசமயத் தலைவர்கள், நிறுவனங்கள் எனப்படுபவை ஒன்று சேர்ந்து உயிர்ப்பலி நடைபெறும் கிராமங்களிலுள்ள பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கிராம பெரியவர்களுடன் பேசி - ஒரு இயக்கத்தை ஏற்படுத்தி - கிராம அடிமட்ட நிலையில் பிரச்சினையை அணுகினால் இக்கொடிய செயலை ஒழிப்பது முடியாத காரியமல்ல. சைவசமயத்தின் ஆணிவேருக்கு வெந்நீர் ஊற்றிக்கொண்டிருக்கும் இக்கொடிய செயற்பாட்டை நிறுத்த சைவ நிறுவனங்களும், சமயத்தலைவர்களும் இதய சுத்தியுடன் ஒன்றிணைந்து செயற்பட முன்வரவேண்டும். ★


## கருத்தரங்கு

தலைப்பு: "இன்றைய உலகில் சர்வதேச சட்டங்களின் பங்கு"
வழங்குபவர்: R.T.விக்னராஜா
(மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம்)
இடம்: புவியியல் துறை மண்டபம்
நாள்: நாளை (29-05-2002) புதன்கிழமை
நேரம்: பி.ப. 3.00 மணி

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அரசறிவியல் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(4210)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



தோற்றம் 26 - 12 - 1948
மறைவு 28 - 04 - 2002

எங்கள் குடும்ப தீபம்

### அமரர் கணபதி ஜீவகாருண்யம்

(நிறைவேற்று அதிகாரியும், உதவி முகாமையாளரும், காரைநகர்சாலை வ.பி.போ. சபை)

குடும்பத்தின் குலவிளக்காய் அன்பின் திருவுருவாய்
பண்பின் இருப்பிடமாய் இருந்து
பாசத்தின் ஜோதியை எல்லோருக்கும் பொழிந்தீரே!
நாம் எதிர்பாராத வேளையில் எம்மை தவிக்கவிட்டு
நாகபூஷணி அம்மன் பாதம் சரணடைந்தீரே!
இன்று ஆதரவு இல்லாது அழுகின்றோம்.

இன்று (28.05.2002) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும், தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(4217)

உங்கள் பிரிவால் துயருறும்:
திருமதி ஜெ.ஜீவகாருண்யம்
குடும்பத்தினர்.

187,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



## அகவை அறுபதில் சேவைநலன் பாராட்டு



### திரு. கந்தையா சந்திரமோகன்

(பொறுப்பதிகாரி, நல்லூர் பிரதேச சபை)

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் 34 வருடங்கள் உள்ளூராட்சி மன்றில் பணியாற்றி நல்லூர் பிரதேசசபை பொறுப்பதிகாரயாக 10 வருடங்கள் பாங்குடனே சேவையாற்றி ஓய்வுபெறும் சேவை நாயகனை இன்று அகவை அறுபது நிறைவில் நல்லூர் கந்தனின் திருவருளால் சீரோடும் சிறப்போடும் வாழ உளமார வாழ்த்துகிறோம்.

தலைவர், உறுப்பினர்கள்,
செயலாளர், உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
(4176)



## நீங்காத நினைவில் எட்டாம் ஆண்டு



தோற்றம் 18 - 12 - 1929
மறைவு 28 - 05 - 1994


### அமரர் நடராஜா கனகேஸ்வரன்

(இளைப்பாறிய அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை)

மல்லாகம். (4221) - மனைவி.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 26 - 12 - 1948
மறைவு 28 - 04 - 2002

### அமரர் க.ஜீவகாருண்யம் (B.A)

(நிறைவேற்று அதிகாரியும் உதவிமுகாமையாளரும் - காரைநகர்சாலை, வ.பி.போ. சபை)

உங்கள் நினைவு அலைகள்
ஓயாது நாளும் பொழுதும்
எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும்!

உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

(4117)

பிரிவால் துயருறும்
காரைநகர் சாலை முகாமையாளரும்,
சக ஊழியர்களும்.

வடபிராந்திய
போக்குவரத்துசபை.



## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 09 - 09 - 1964
மறைவு 21 - 05 - 2000

### திருமதி இந்திரா கிருஸ்ணானந்தன்

அன்பின் பிறப்பிடமாய் பாசத்தின் பெட்டகமாய்
பண்பின் உறைவிடமாய் பாரில் வாழ்ந்திருந்தீர்!
இன்று உங்களை நினைவு கூருகின்றோம்
மறக்க முடியவில்லையே உமது திருமுகத்தை!

மீசாலை மேற்கு,
மீசாலை.
(4162)

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

# இறுதி யாத்திரையாகிவிட்ட உல்லாசப் பயணம்......!

**அண்மையில் தென்னிலங்கைக்குச் சுற்றுலாச்சென்ற சமயம் யாழ்ப்பாண இளைஞர்கள் இருவர் ஆற்றில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் பற்றி 'லங்கா தீப' பத்திரிகையில் வெளியான தகவல்கள் இங்கு மறுபிரசுரம் செய்யப்படுகின்றன.**

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருட்தந்தை மரியபிள்ளை இம்மனுவேல் பயஸ், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 16 இளைஞர்கள், யுவதிகளுடன் கந்தகட்டிய லோக்கல் ஓயாவை நோக்கியவாறு ஏங்கிக் கொண்டிருந்தார். பௌத்த குருமார் பலர் அவருக்கு ஆறுதல்வார்த்தைகள் கூறிக்கொண்டிருந்தனர். சிங்கள கிராமவாசிகளையும் பொலீஸாரையும் ஏற்றிய பல படகுகள் லோக்கல் ஓயாவில் தேடுதல்களை மேற்கொண்டிருந்தன. சுழியோடிகள் நீரடிக்குச் சென்று தேடுதல்களை மேற்கொண்டனர். யாழ்ப்பாணத்திலிருந்து வந்த இளைஞர், யுவதிகளின் கண்களில் இருந்து நீர் பெருகியவாறு இருந்தது. அவர்கள் கண்ணீர் விடுவதைக் கண்ட உள்ளூர்ப்



பிரதேச வாசிகளுடன் அருட்தந்தை பயஸ்

**தமிழில்: கஜனி**

பெண்களின் கண்களும் நீரினால் நிறைந்தன. இந்தத் துன்பச் சுமைகளால் மனது வேதனையடைந்தது.

சிங்கள இளைஞர்கள் நீரில் மூழ்கி சுழியோடி இரு இளைஞர்களைத் தேடினர். தேடப்பட்டவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த தமிழ் இளைஞர்கள் இருவராவர். அவர்களில் ஒருவர் மனோகரன் ஜூட், வயது 29. மற்றவர் தேவராஜா சாம்சன். மனோகரன் ஜூட் யாழ்ப்பாணத்திலுள்ள குருமடத்தில் மின் இணைப்பாளராகவும் வெல்டராகவும் பணியாற்றியவர். சாம்சன் அடைக்கலமாதா (OLR) இளைஞர் மன்றத்தின் செயலாளர்.

ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்பட்ட பின்னர் தென்பகுதி மக்கள் யாழ்ப்பாணம் செல்ல ஆரம்பித்தனர். அப்படிச் சென்றவர்களில் பலர் அருட்தந்தை இம்மனுவேல் பயஸ் பணியாற்றிய தேவாலயத்திலே தங்கினர்.

"பாதர்! எங்கள் ஊருக்கு ஒரு முறை வாருங்களேன். இப்போது பிரச்சினைகள் ஏதுமில்லையே" எனத் தென்பகுதியில் இருந்து சென்றவர்கள் அருட்தந்தையிடம் கூறினர்.

அருட்தந்தையும் அது குறித்து சிந்தித்தார். யாழ்ப்பாணத்திலுள்ள இளைஞர், யுவதிகள் புகையிரதத்தைக் காணவில்லை. தேயிலைத் தோட்டங்களையோ, நீர்வீழ்ச்சிகளையோ காணவில்லை, சிங்கள மக்களையும், பொலீஸாரையும் அவர்கள் தங்களது நண்பர்களாகக் கருதவில்லை. பதிலாக தங்களது எதிரிகளாகவே கருதினர். ஏ-9 நெடுஞ்சாலை விடுதலைப் புலிகளால் திறக்கப்பட்டது. அத்துடன் சிங்கள மக்களைப் பற்றித் தமிழ் மக்களின் மனங்களில் இருந்த வடிவம் மறையத்தொடங்கியது. அருட்தந்தை, அடைக்கல மாதா இளைஞர் மன்றத்துக்கு தென்பகுதிக்குப் பயணம் செல்வது குறித்துத் தெரிவித்தார். அருட்தந்தையின் முடிவை இளைஞர்களும், யுவதிகளும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் கைதட்டி வரவேற்றனர்.

பாதர்! மிகவும் சந்தோசம். நாங்கள் ரயிலைக் காணவில்லை. தேயிலைத் தோட்டத்தையோ, நீர்வீழ்ச்சியையோ ஒருபோதும் காணவில்லை என இளைஞர்களும், யுவதிகளும் தெரிவித்தனர்.

இவ்வாறுதான் பயணம் தயாரானது. இந்தக் குழுவில் ஏழு யுவதிகளும் 9 இளைஞர்களும் அடங்கியிருந்தனர். அருட்தந்தை பயஸ் இம்மனுவேல் குழுவுக்கு தலைமை வகித்தார்.

கடந்த 10ஆம் திகதி இக்குழுவினர் யாழ்ப்பாணத்தில் இருந்து பஸ் மூலம் வவுனியா வந்து சேர்ந்தனர். வவுனியாவில் ரயில் எடுத்தனர்.

அவர்கள் பாட்டுக்களைப் பாடிய வண்ணம் மிகவும் சந்தோசமாக கொழும்புவரை பயணம் செய்தனர். நாட்டின் தலைநகருக்கு அவர்கள் வந்தது இதுவே முதல் தடவையாகும்.

கொழும்பில் இருந்து அவர்கள் பதுளை புகைவண்டியில் அப்புத்தளைநோக்கி பயணமாகினர். அவர்கள மீண்டும் கோஷ்டிகானம் இசைத்தனர். அவர்கள் தமிழ்ப் பாடல்களையே பாடினர். ரயில் புறப்படும் வேளையில் அந்தப் பெட்டியில் சிங்கள இளைஞர்களும், யுவதிகளும் ஏறினர். அவர்களும் இசையில் கலந்து கொண்டனர். கைகளால் தாளம் போட்டனர். இரு தரப்பினருக்குமிடையில் கருத்துக்களை பரிமாற மொழி இடைஞ்சலாக இருந்தது. இருப்பினும் ஊமை மொழிமூலம் உறவு கொண்டனர். ஒரு சில சந்தர்ப்பங்களில் அருட்தந்தை தனக்குத் தெரிந்த சிங்களத்தில் இரு தரப்பினருக்குமிடையில் உறவுப்பாலத்தை அமைத்தார்.

சம தரையில் சென்றுகொண்டிருநத ரயில் மலைநாட்டுக்குள் நுழைந்தது. மலைச்சரிவுகள், தேயிலைத் தோட்டங்கள், தேயிலைத் தொழிற்சாலைகள், நீர்வீழ்ச்சிகள் ஆகியன கண்களின் முன்னால் ஓடிக்கொண்டிருந்தன. 'புகைவண்டி இன்னும் மெதுவாக ஓடினால் எவ்வளவு நன்றாய் இருக்கும்' என அவர்கள் தமிழில் கூறிக்கொண்டனர்.

அருட்தந்தை அவர்களை நேர காலத்துடன் நித்திரைவிட்டு எழுப்பினார். பஸ் குழந்தைகள் இல்லத்தில் தயாராய் நின்றது. காலை உணவை முடித்துக்கொண்டு கதிர்காமத்தை நோக்கிய பயணத்தை ஆரம்பித்தனர். வழியில் தணமல்வில, புத்தல ஆகிய இடங்களில் பஸ் நிறுத்தப்பட்டது. அந்த இளைஞர்களும், யுவதிகளும் கூடுகளில் இருந்து விடுபட்ட பறவைகள் போல் அந்த நகரங்களில் உலாவினர். மொழி தெரியாவிடினும் கடைகளுக்குச் சென்று விரலால் பொருள்களைக் காட்டி பிஸ்கட், சொக்கிலேட் போன்ற பொருள்களை வாங்கினர்.

"நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்" என ஓர் இளம் சிங்கள வர்த்தகர் அவர்களிடம் சிங்கள மொழியில் விசாரித்தார். இளைஞர்களும், யுவதிகளும் மொழி புரியாததால் ஒருவரை ஒருவர் பார்த்தனர். இருந்தபோதிலும் ஒரு யுவதி கேள்வியை ஓரளவு புரிந்து கொண்டார். "ஜெப்னா, ஜெப்னா" எனப் பதிலளித்தார். தனது கடையில் இருந்த வாழைப்பழக் குலையில் இருந்து ஒரு சீப்பு வாழைப் பழத்தை வெட்டி இதைச் சாப்பிட்டுக் கொண்டு பயணம் செய்யுங்கள் எனக் கொடுத்தார். அதற்கான பணத்தை வேண்ட அவர் மறுத்துவிட்டார்.

அவர்கள் அருட்தந்தையிடம் ஓடிச் சென்றனர். கடை உரிமையாளர் இனாமாக வாழைப்பழம் தந்தது பற்றிக் கூறினர். அருட்தந்தை புன்முறுவல் பூத்தார்.

கதிர்காமத்திலிருந்து திரும்பும் வழியில் தியளும நீர்வீழ்ச்சிக்கு அண்மையில் பஸ் நிறுத்தப்பட்டது. இளைஞர்களும் யுவதிகளும் அவசரப்பட்டு பஸ்ஸைவிட்டு இறங்கினர். நீர் வீழ்ச்சியை அண்மித்தனர். பல்வேறு கோணங்களில் புகைப்படங்களை எடுத்தனர். அவர்களை மீண்டும் பஸ்ஸில் ஏற்றுவது அருட்தந்தைக்கு பெரும்பாடாகிற்று.

"பாதர், இன்னும் கொஞ்ச நேரம் நிற்போம். இனி எங்களுக்கு எப்போது பார்க்கக் கிடைக்கும்" என இளைஞர்களும் யுவதிகளும் கேட்டபோது அருட்தந்தைக்கு சம்மதிப்பதைவிட வேறு ஒன்றும் செய்யமுடியவில்லை. தமக்குத் திருப்தி ஏற்படும்வரை நீர்வீழ்ச்சியை அனுபவித்த பின்னர் தங்குமிடத்தை வந்தடைந்தனர். மறுநாள் கண்டிக்குச் சென்று தலதா மாளிகையைத் தரிசிப்பதே அவர்களது திட்டமாகவிருந்தது.

அவர்களை ஏற்றிவந்த பஸ் பதுளையைக் கடந்து மஹியங்கனை வீதியால் வந்துகொண்டிருந்தது. கந்தகட்டி என்ற இடத்திற்கு அண்மையில் உள்ள பலகொல்ல என்ற இடத்தில் பஸ் நிறுத்தப்பட்டது.

அங்குள்ள ஹோட்டலின் முகாமையாளரான நுவன் என்பவருக்கு மொழி தெரியாத காரணத்தினால் இவர்களுடன் கலந்துரையாட முடியவில்லை. மிகவும் வேதனை அடைந்தார்.



சம்பவம் பற்றிய தகவல்களை கூறிய சிங்கள இளைஞன்.



சுற்றுலா சென்றவர்களில் ஒருவர்.

கந்தவட்டியில் இருந்து புறப்பட்ட பஸ் லோக்கல் ஓயா சப்பாத்துப் பாலத்துக்கு அண்மையாக நிறுத்தப்பட்டது. "குளிப்போம், குளிப்போம்" என சிலர் கூறினர்.

"வேண்டாம், இங்கு குளிப்பது நல்லது அல்ல" என ஊர் மக்கள்



ஆற்றில் தேடுதல் முயற்சி

தெரிவிக்கவே எவரையும் குளிக்க அருட்தந்தை அனுமதிக்கவில்லை.

பஸ் மீண்டும் திருப்பப்பட்டது. ரந்தெனியாவில் ரஜமாவத்தை வழியாக சுமார் 4 கிலோமீற்றர் தூரம் வரை சென்று கொண்டிருந்தபோது காலை உணவை உட்கொள்ள நல்ல ஓர் இடம் கிடைத்தது.

ஜூட்டும், சாம்சனும் கோப்பைகளைக் கழுவுவதற்காக ஆற்றுக்குள் சென்றனர். ஜூட்டின் சப்பாத்து சறுக்கவே அவர் நீரில் விழுந்தார். அவரைப் பிடித்துக் காப்பாற்ற முயற்சித்த சாம்சனும் நீரில் விழுந்தார். ஏனைய இளைஞர்களும் அவர்கள் இருவரையும் காப்பாற்றும் நோக்கில் ஓடி வந்தனர்.

தண்ணீருக்குள் மூழ்கிக்கொண்ட ஜூட் "வேண்டாம், வர வேண்டாம்" என எச்சரித்தார். அதைத் தொடர்ந்து முற்றிலுமாக அவர் நீரில் மூழ்கிக் காணாமல் போய்விட்டார். யாழ்ப்பாண இளைஞர், யுவதிகளின் மரண ஓலம் கந்தவட்டிய கிராமத்தை அதிர வைத்தது. மனித சஞ்சாரம் குறைந்த அந்த இடத்தில் எவரையும் காண முடியவில்லை. அருட்தந்தை ஊர் மக்களுக்கு இது பற்றித் தெரிவிக்க முயற்சிகளை மேற்கொண்டார். மொழி புரியாத காரணத்தால் சிக்கலாகவே இருந்தது.

முடிவில் அருட்தந்தை கந்தவட்டிய பொலிஸ் நிலையம் சென்றார். பொலிஸ் நிலையப் பொறுப்பாளர் எல்.ஜி.குணரத்ன உடனடியாகச் செயலில் இறங்கினார். பொலீஸாரையும் ஏற்றிக்கொண்டு உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்தார்.

அவ்வேளையில் ஊர்மக்களும் பெருமளவில் கூடிவிட்டனர். சம்பவம் இடம்பெற்ற இடத்தில் தேடுவதில் பயன் ஏதும் இல்லை என ஊர்மக்கள் தங்கள் அனுபவத்தைக்கொண்டு தெரிவித்தனர்.

அவர்கள் கூறியபடி அங்கிருந்து 4 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள லோக்கல் ஓயா ஆற்றில் தேடும் பணி ஆரம்பமானது. இதற்காக பல படகுகள கொண்டுவரப்பட்டிருந்தன. சுமார் 36 மணித்தியாலங்கள் காணமல்போயிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு தமிழ் இளைஞர்கள் சிங்கள இளைஞர்களால் மீட்டெடுக்கப்பட்டனர். ஆனால், அப்போது அவர்களது உடல்களில் இருந்து உயிர் பிரிந்துவிட்டது.

தென்பகுதி மக்களின் மனித உணர்வுகளை அறிந்துகொள்ள ஜூட்டும் சாம்சனும் உயிருடன் இல்லை. இருப்பினும் அவர்களுடன் வந்திருந்த ஏனைய இளைஞர், யுவதிகளும் அருட்தந்தையும் அந்த அன்பைப் புரிந்துகொண்டிருப்பர். ☆

---

## மதங்கள் போதிப்பன ஒன்றே

# அற்ப, சொற்ப சலுகைகளுக்காக மதம்மாறுவோர் இனத்துக்கும், மதத்துக்கும் துரோகமிழைப்பவர்கள்

## கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கமலநாதன் உரை

யாழ்ப்பாணம்,மே28

பிறசமயத்தவர்களின் அற்ப சொற்ப சலுகைகளுக்கும், அவர்களின் உரையாடல் சாமர்த்தியத்துக்கும் எடுபட்டு சைவசயத்தவர்கள் பலரும் இன்று மதம் மாறிவருகின்றனர். இவ்வாறு மதம்மாறுவோர் தமது இனத்துக்கும் மதத்துக்கும் துரோகமிழைத்தவர்களாகிவிடுகின்றனர்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி· கலாநிதி தி.கமலநாதன்.

யாழ்.சைவ பரிபாலன சபையின் பட்டமளிப்பு விழாவும், பரிசளிப்பு விழாவும் நேற்றுமுன்தினம் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

சைவ பரிபாலன சபையின் உப தலைவர் சைவப்புலவர் வ.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:-

எமது பண்பாடுகள், கலாசாரம், சமயம் என்பன இன்றைய நிலையில் பல்வேறு காரணிகளால் அழிக்கப்பட்டு வருகின்றன.

நாம் எமது சமய, கலாசார, பண்பாடுகளை இறுக்கமாகப் பின்பற்றி நடப்பதன் மூலம் எம்மத்தியிலுள்ள சீரழிவுகளைத் தடுத்து நிறுத்தலாம்.

இந்து மதத்தைச் சேர்ந்த அனைவரும் நேரத்துக்கு முக்கியத்துவம் அளித்து, அதனை மதித்து நடக்க வேண்டும். நேரத்தைத் தவறவிடுவதால் நாம் பல நற்கருமங்களைத் தவறிவிடுகின்றவர்களாகிவிடுகின்றோம்.

தனிமரம் தோப்பாகாது. அதே போல ஒரு சிலரால் மேற்கொள்ளப்படும் சமயப் பணிகள் முற்றுமுழுதாக சமயத்தை சீர்ப்படுத்தாது. எனவே, எல்லோரும் இணைந்து சமயப் பணிகளை ஆற்ற முன்வர வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வுக்கு ஆசியுரை வழங்கிய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் தமது உரையில் கூறியதாவது:-

இன்றைய மாணவர்கள் இந்து சமயக் கிரியைகளையும், வழிபாட்டு முறைகளையும் அடியொற்றி நடக்கின்றார்களா? என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது.

மாணவர்கள் சமயத்தை படித்துப் பட்டம் பெறுவதுடன் மட்டும் நின்றுவிடாது, எமது சமுதாய பண்பாட்டு விழுமியங்களை ஏனையோருக்கு புகட்டுபவர்களாக இருக்கவேண்டும்.

அன்னியருடைய வருகையைத் தொடர்ந்து அழிவடைந்து சென்ற எமது சமயத்தை ஆறுமுக நாவலர் போன்ற பெரியவர்கள் பேணி வளர்த்தார்கள்.

அவர்களின் வழியில் பணியாற்றி வரும் சைவ பரிபாலன சபையின் சேவைகள் என்றைக்குமே வியந்து போற்றத்தக்கவை - என்றார்.

எமது மக்கள் நீதி, அறம், அன்பு என்பவற்றுக்கு முன்னைய காலங்களில் முக்கியத்துவம் கொடுத்து வந்தனர். இவற்றினை நாம் பழைய கால சமய இலக்கியங்களிலிருந்தும், சான்றுகளிலிருந்தும் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

நீதி பற்றி எடுத்துக் கூறியபோது, மனுநீதிகண்ட சோழன் தன் மகனுக்குத் தண்டனை கொடுத்ததிலிருந்தும், சிவபெருமானுக்கு சுந்தரர் தோழனாக இருந்தபோதும் அவர் சங்கிலியாருக்கு கொடுத்த வாக்குறுதியை மீறியமையால் அவருக்கு பார்வை இழக்கச்செய்து, பின் அவர் தான் செய்த பிழையை உணர்ந்ததன் பின் அவரை நல்வழிப்படுத்தியதிலிருந்தும் எமது சமயம் நீதிக்கு முன்னுரிமை கொடுத்ததனை அவதானிக்க முடிகின்றது.

எமது சமயம் அன்பு வழி இயங்குவது. இதற்கு கண்ணப்பனார் வேடுவ குலத்தில் பிறந்தபோதும் அவர் அறியாத் தன்மையால் அவமரியாதையாக பூசை வழிபாடுகள் இயற்றிய போதும் அவரைத் தண்டிக்காது அவரது பூசை வழிபாடுகளை ஏற்றுக்கொண்டதோடு அவருடைய அன்பின் பெருமையை உலகறியச் செய்தார் - என்றார். (எ-4-ரி)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியிலிருந்து 200 யார் தூரத்தில் வாகனப் போக்கு வரத்து வசதியும், மின்சாரம், தனிக் கிணறு, மல்சலகூடம் போன்ற வசதியு முடைய 1½ பரப்புக்காணி (4அறை களும் Hall க்குரிய அத்திவாரத்துடன்) விற்பனைக்கு உண்டு. Survey Plan முதலிய விபரங்களுக்கு: க.அம பிகைபாகர், 38, சிவன் கோவில் றோட், திருநெல்வேலி தெற்கு. (4244)

### விற்பனைக்கு

மஞ்சள், வெள்ளை, சிவப்பு, ஒறேஞ் டபிள் கலர், றோஸ், அந்தூ ரியம், கிரிஸ்சாந்திமம் ஆகியன விற் பனைக்கு உண்டு. தொடர்பு: சே. கிருஷ்ணகுமார், விதானை வளவு, மானிப்பாய். (4177)

ஏழாலை மேற்கில் புன்னாலைக் கட்டுவன் மல்லாகம் வீதிக்கு அண்மை யில் வீடு வளவும், ஏழாலை கிழக் கில் கத்தோலிக்க தேவாலயத்திற்கு அருகில் கிணற்றுடன் காணியும் விற் பனைக்குண்டு. தொடர்பு: காந்தி சைக கிள் கடை, மயிலங்காடு, ஏழாலை தெற்கு. தொலைபேசி: 595844 கொழும்பு. (C-22307)

பலஇன கலர்மீன்கள், மீன் தொட்டிகள், மீன்தொட்டிக்குரிய மோட் டர்கள், அழகுசாதனப் பொருள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/17, சீனியர் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (4243)

இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தினமும் பெற்றுக்கொள்ளலாம் சுத்தஞ்செய்தல் இலவசம். தொடர்பு: Y.A.சுரேஷ், கிராமக்கோடு, எரிபொருள நிலைய முன்வீதி (200 மீற்றர் உள்), பருத்தித்துறை. (4216)

### இலகு திருமண சேவை

1960, ரோகிணி, பட்டதாரி ஆசி ரியைக்கு அரச தனியார் மணமகன் உள்ளூர், வெளியூரில் தேவை. தார மிழந்தவரும் விண்ணப்பிக்கலாம். Doctors, Engineers, ஆசிரியர், லிகி தர் ஆண்கள் உண்டு. தொடர்பு: துரை விமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (4229)

### மணமகள் தேவை

1968ஆம் ஆண்டு, செவ்வாய்க் குற்றமற்ற, நட்சத்திரம் மகம் 4ஆம் பாதம் London Citizan உள்ள மணமகனுக்குப் பொருத்தமான மணமகள் தேவை. Photo உடன் துரிதமாகத் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை, 178, நாவ லர் வீதி, யாழ்ப்பாணம். (4237)

### பிறிமா கோழிக்குஞ்சுகள்

பிறிமா கைலைன் வெள்ளை பேட் டுக் குஞ்சுகளும், புறொயிலர் குஞ்சு களும் எம்மிடம் பதிவுசெய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள் ளலாம். தொடர்புகள்: மாருதி ரெக்ஸ், இல.1, பஜார் வீதி, யாழ்ப்பாணம்; சிற்றி காமென்ஸ், 535A, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (4171)

பிறிமா ஹைலைன் பிறவுண் வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் ரூபா40/-, புறொயிலர் குஞ்சுகள் ரூபா 30/- விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 'மல்லிகாபதி' மானிப்பாய். (C/22292)

### தேவை

தொலைபேசி இணைப்பு உரிமம் தேவை. உரிமத்தை மாற்றிவிற்க விரும புவோர் தொடர்பு கொள்ளவும்: A.N.S. நடேசபிள்ளை, T.P.3527. (4201)

### வாடகைக்கு தேவை

K.K.S. வீதி, ஸ்ரான்லி வீதி, மணிக்கூட்டு வீதி, மின்சார நிலைய வீதி ஆகிய பகுதிகளில் கடை ஒன்று வாடகைக்குத் தேவை. தர விரும்பு பவர்கள் தொடர்பு கொள்ள வேண் டிய முகவரி: S.அருணாசலம், ஆஸ் பத்திரி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பா ணம். T.P: 2665, 2399. (4238)

## கல்வி அமைச்சர் நூலகங்களையும் திறந்து வைப்பார்

நாளைமறுதினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ள பாடசாலைக் கல்வி அமைச்சர் சுர நிமலராஜபக்ஷ குடாநாட்டில் உள்ள 9 பாடசாலைகளில் நூலகங்களைத் திறந்து வைக்கவுள்ளார்.

வல்வை மகளிர் கல்லூரி, உடுப் பிட்டி அ.மி.கல்லூரி ஆகியவற்றுக்கு விஜயம் செய்யும் அமைச்சர் அங்கு கல்விப் பயிற்சி நெறியொன்றையும் ஆரம்பித்து வைப்பார். நூலகங்கள் திறந்து வைக்கப்படவுள்ள 9 பாட சாலைகளின் விவரம் வருமாறு:-

கரணவாய் பொன்னம்பலம் வித்தி. கம்பர்மலை அ.த.க.பாடசாலை, இமை யாணன் அ.த.க. பாடசாலை, வட. இந்து மகளிர் கல்லூரி, புலோலி மெ. மி.த.க.பாடசாலை, நெல்லியடி ம.ம. வி, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ்.கன்னியர்மடம் ம.வி., கொட்டடி நமசிவாய வித்தியாலயம். (எ-10)

# தமிழ் ஆசிரியர் பிரச்சினை; அறிக்கைதர பிரதமர் பணிப்பு

காரைதீவு,மே28

தமிழ் ஆசிரியர்களின் பிரச்சினைக்கு விரைவில் உரியதீர்வு காணப்படுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரி வித்திருக்கிறார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கடந்த வெள்ளியன்று வடக்கு-கிழக்கில் நடத்திய சுகவீன லீவுப் போராட்டத் தினத்தில் பிரதமரைச் சந்தித்த தமிழ தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களான மாவை சேனாதிராஜா, அடைக்கலநாதன் ஆகியோர் ஆசிரி யர்களின் பிரச்சினையை பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

தமிழ் ஆசிரியர் சங்கத்தின் கோரிக கையடங்கிய பத்திரத்தை உடனடி யாகப் பெற்று படித்த பிரதமர் அறிக்கை சமர்ப்பிக்குமாறு அவரது செயலாளர் பிரடமன் வீரக்கோனுக்கு உத்தரவிட டார் என்று தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக ஆசிரிய சங்கத்தை அழைத்துப்பேசி தீர்வுக்கான நகலைத தயாரிக்குமாறு கல்வியமைச்சரிடம் பிரதமர் கேட்டுள்ளார். (ம)

## மரதன் ஓட்டம்

எமது நவாலி சென்.பீற்றேர்ஸ் சனசமூக நிலைய பொன்விழாவை முன்னிட்டு எதிர்வரும் 08.06.2002 (சனிக் கிழமை) திறந்த மரதன் ஓட்டப்போட்டி நடைபெற வுள்ளதால் தங்கள் பெயர்களை 05-06-2002ற்கு முன்னதாக எமது நிலையத்தில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள் கிறோம்.

(4240) தலைவர் பொ.இம்மனுவேல்

## கல்வி நிலை பற்றிய கவலையா? இனிக் கவலையை விடுங்கள்!

ROTARACT CLUB

யாழ்ப்பாணம் மண்ணிலோ கொழும்பு மாநகரிலோ உங்கள் உயர்கல்வி, தொழில்வாய்ப்பைத் தேட வழிகாட்டி!

வழிகாட்ட வருகின்றார்கள்:

**பேராசிரியர்கள், பிரபல கல்விமான்கள்.**

பலரது வேண்டுகோளுக்கிணங்க விண்ணப்ப முடிவு திகதி 05.06.2002 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

*மேலதிக விவரங்களுக்கு:*

**அருணன்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்**

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/22308)

## BATA REQUIRES SALES REPRESENTATIVES

BATA Dealer Service Centre in Jaffna requires Sales/Marketing Representatives to market their products in Jaffna Peninsula. Two years experience in sales and marketing. Age between 22 to 35 years. Qualification in marketing will be an added advantage.

*Apply immediately to:*

BATA Dealer Service Centre,
**Advt.No.1526,**
**C/o Uthayan, Jaffna.** (C/22309)

## கண்ணீர் அஞ்சலி

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அ.விநாயகமூர்த்தி அவர்களின் பாசமிகு பாரியார்

**திருமதி தையல்நாயகி விநாயகமூர்த்தி**

அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்திகேட்டு ஆழ்ந்த கவலை அடை வதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

*ஸ்ரீ மில்,*
*பரமேஸ்வராச் சந்தி.* (4245) மு.சிவலிங்கம்
ந.ஸ்ரீகந்தராஜா.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 21 | 07 |
| - | - |
| 01 | 06 |
| - | - |
| 1929 | 2001 |



## அமரர் சோமசுந்தரம் விமலசிங்கம்

*(ஓய்வுபெற்ற ஆசிரியர்)*

திதி: 28.05.2002 அபரபக்க துதியை

ஆண்டு ஒன்று சென்றாலும் நீங்குமா
உமது நினைவலைகள்?
ஆசிரியராய் ஆற்றிய பணிகள், சமூகநல சேவைகள்,
ஆலய அறங்காவல் சபைகளில் நின்று ஆற்றிய பணிகள்,
அன்புத்தந்தையாய் எமக்கு ஆற்றிய பணிகள் யாவும்
எம் நெஞ்சைவிட்டு அகலுமா?

*அன்னாரின் ஆத்மசாந்தி வேண்டி அனைவரும் பிரார்த்திப்போம்.*

*"சுந்தரபவனம்"*
*சண்டிலிப்பாய் தெற்கு, சண்டிலிப்பாய்.* - குடும்பத்தினர். (4241)

# கலாலயா பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

## மகளிருக்கான மனைப்பொருளியலும் கைத்திறனும் பயிற்சிகள்

- **கேக் ஐசிங்**
  (பட்டர் ஐசிங், றோயல் ஐசிங், பாச்மென்ட் ஐசிங், புறொஸ்றிங் ஐசிங், Fondant Icing மற்றும் மாச்சீனி அலங்காரம்)
- **உணவு தயாரித்தல்**
  (கீழைத்தேச, மேலைத்தேச உணவுகள், சிற்றுண்டிகள், புடிங் வகைகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், சூப் வகைகள் தயாரித்தல். இத்துடன் உணவை அலங்கரிக்கும் முறை, மரக்கறிகளைக் குடைந்து உருவங்கள் செய்தல், மேசை அலங்காரம், உணவு பரிமாறும் விதம்)
- **உடை தயாரித்தல**
  (குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான உடைகள், கதிரை விரிப்பு, தலையணை உறை தைத்தல், பூப்போடுதல்)
- **பூவேலை**
  (ஸ்ரொக்கின் நெற், டிப் இன் மலர்கள், Panclay மலர்கள், பேப்பர் றிபன் மலர்கள், துணியினால் மலர்கள், மலர்ச் செண்டுகள் Bouqet செய்தல்)
- **கைவேலை**
  (பேப்பர் அலங்காரம், Soft Toys, வைக்கோல் வேலை, கழிவுத் துணி வேலை, கம்பளி நூல் வேலை, றிபன் வேலை)
- **பப்றிக் வர்ணம் தீட்டுதல் (FEBRIC PAINTING)**
  (கதிரை விரிப்பு, தலையணை உறை, உடைகள், சாடிகளில் வர்ணம் தீட்டுதல்)

ஆகிய பயிற்சிகள் பயிற்றுவிக்கப்படும். மேற்படி பயிற்சிகள் எல்லாவற்றையும் பயில்வோருக்கு இலவசமாக கூந்தல் அலங்காரம், மணப்பெண் அலங்காரம், முக ஒப்பனை, கோலம் வகுப்புகள் நடைபெறும்.

- பயிற்சிக் காலம் 6 மாதம்
- பயிற்சியின் முடிவில் டிப்ளோமா தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.
- இப்பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது.
- கிழமை நாள் பிரிவு பயிற்சிகள் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாள்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை நடைபெறும்.
- சனி, ஞாயிறு பிரிவு பயிற்சிகள் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை நடைபெறும்.

✓ **சனி, ஞாயிறு புதிய வகுப்புகள் ஆரம்பம்: 01.06.2002(சனி)**
✓ **கிழமை நாள் புதிய வகுப்புகள் ஆரம்பம்: 05.06.2002(புதன்)**

மேலும் விவரங்களுக்கு காலை 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை நேரில் தொடர்பு கொள்ளவும்.

(C/22310) **இயக்குநர்.**






யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் மதுவரி உத்தியோகத்தர்களுக்கான ஐந்துநாள் பயிற்சிப் பட்டறை யாழ்.பல நோ.கூ.சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், சிரேஷ்ட அரச வழக்கறிஞர் எஸ்.துரைராஜா, மதுவரி ஆணையாளர் டி.ஜே.எம்.பி.ஹட்டி ஆராய்ச்சி மற்றும் மதுவரித் திணைக்கள பிரதம கணக்காளர் பி.எம்.ரட்னபாலா, வடபிராந்திய உதவி மதுவரி ஆணையாளர் எஸ்.சிவானந்தன், மதுவரித் திணைக்களத்தின் போதைப்பொருள் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த அத்தியட்சகர் எம்.நந்தசேன ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதை முதல் இரு படங்களிலும் -

பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்ட உத்தியோகத்தர்களில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

*(படங்கள்: தேவராஜன்.)*

# கல்வி நிலையங்கள் அருகில் மது விற்பனை; கேள்விக்குறியாகிவிட்ட மாணவர் எதிர்காலம்

## மேலதிக அரச அதிபர் வைத்திலிங்கம் உரை

யாழ்ப்பாணம்,மே28

இளைய சமுதாயம் இன்று பல பிரச்சினைகளையும் பின்னடைவுகளையும் சந்தித்து வருகின்றது.

மாணவர்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும், கல்விக் கூடங்களுக்கு அருகிலும் மதுபான நிலையங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன. இதனால் தூண்டப்பட்ட இளஞ் சந்ததியினரின் எதிர்காலம் கேள்விக் குரியதாகிவிட்டது.

எனவே இத்தகைய நிலைப்பாடுகளைத் தவிர்க்க - தடைசெய்வதில் மதுவரித் திணைக்களத்தின் செயற்பாடுகள் அத்தியாவசியமானதாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம்.

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் மதுவரி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப் பட்டறை நேற்று யாழ. பல நோ.கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது தொடர்பான ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மேலதிக அரசாங்க அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டுக்கு தீங்கு பயக்கும் மது தொடர்பான நடவடிக்கைகளுக்கு மதுவரித் திணைக்களத்தின் செயற்பாடு மிகவும் அவசியமானது.

சட்டவிரோத மது உற்பத்தி மற்றும் விற்பனை ஆகியவற்றில் ஈடுபடுபவர்களைக் கண்டுபிடித்தல் மற்றும் அது குறித்த நடவடிக்கைகளை எடுத்தல் தொடர்பாக மதுவரி உத்தியோகத்தர்களுக்குப் போதிய பயிற்சிகள் அவசியமாகும் - என்றார்.

நிகழ்வுகளுக்கு தலைமை வகித்து உரையாற்றிய மாவட்ட மதுவரி உத்தியோகத்தர் வி.கிறிஸ்ரி யோசப் தனது உரையில்:-

குடாநாட்டில் மதுவரி உத்தியோகத்தர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். ஆளணிப் பற்றாக்குறை மற்றும் வகன வசதியின்மை காரணமாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

எமது பணிக்கு சகல தரப்பினரும ஒத்துழைப்பு வழங்கும் பட்சத்தில் குடாநாட்டின் மது தொடர்பான பிரச்சினைகளுக்கு மிக விரைவில் தீர்வு காணப்படும் - என்றார்.

கொழும்பிலிருந்து வருகை தந்த அதிகாரிகள் பயிற்சி பற்றியும், அதன அவசியம் பற்றியும், மதுவரிச் சட்டம் தொடர்பான நடவடிக்கைகள் பற்றியும எடுத்துக் கூறினர். (எ-13-8)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் ஆளணிப் பற்றாக்குறை தொடர்கிறது

யாழ்ப்பாணம்,மே28

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஆளணிப் பற்றாக்குறை தொடர்ந்தும் நிலவி வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விசேட வைத்திய நிபுணர்கள், இடைநிலைப் பரிசோதகர்கள், தாதிகள் மற்றும் சிற்றூழியர்களுக்கான பற்றாக்குறை பெரிதும் நிலவுகின்றன. அவற்றை நீக்குவதற்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை.

இது விடயம் தொடர்பாகத் தற்பொழுது உரிய தரப்பினருடன் தொடர்புகொண்டதையடுத்து அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அவர்கள் இணங்கியுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

அண்மையில் ஏ-9 தரைவழிப் பாதை திறக்கப்பட்டதை அடுத்து அதனூடாக மருந்துப்பொருள்கள் எடுத்து வரப்படுவதாகவும் -

இதன் காரணமாகக் கடந்த காலங்களில் இருந்ததைவிடத் தற்பொழுது மருந்துகளுக்கான தட்டுப்பாடு குறைந்துள்ளதாகவும் -

அத்துடன் முன்பைவிட இப்பொழுது அதிக அளவு மருந்துகள் எடுத்து வரப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10-ரி)

# குடாநாட்டை விட்டு ஒருபோதும் நாம் இனி வெளியேறமாட்டோம்!

## புலிகள் பிரமுகர் பாப்பா தெரிவிப்பு

வலி.வடக்கு,மே28

இனி எக்காலகட்டத்திலும் யாழ். மாவட்டத்திலிருந்து விடுதலைப் புலிகள் வெளியேறப் போவதில்லை.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பிரமுகர் பாப்பா.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வலிகாமம் கிழக்கு கோட்ட அரசியல் துணைப் பணிமனைத் திறப்பு விழா வலிகாமம் பொறுப்பாளர் சி.தமிழ்மறவன் தலைமையில் நீர்வேலி கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் இடம்பெற்றது.

பொதுச்சுடரை தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் பாப்பா ஏற்றிவைத்தார். தேசியக் கொடியை யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஏற்றிவைத்தார்.

ஈகச் சுடரை மாவீரர் ராதையின் பெற்றோர் ஏற்றிவைத்தனர். அலுவலகப் பெயர்ப் பலகையை மாவீரர் பாரியின் பெற்றோர் திரைநீக்கம் செய்தனர். அலுவலகத்தை வலி.கிழக்கு பிரதேச செயலாளர் க.கேதீஸ்வரன் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பாப்பா தொடர்ந்து தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்திற்கு இன்னும் ஆயிரம் உறுப்பினர்கள் வரப்போகின்றார்கள். நாங்கள் உங்களினால் வளர்க்கப்பட்டவர்கள். எங்களிடம் பிழைகள் ஏதும் இருந்தால் அதனை சுட்டிக்காட்டி திருத்தும் பொறுப்பும் கடமையும் உங்களுக்கு உண்டு. எதனையும் எங்களுடன் மனம்விட்டு கதையுங்கள்.

யாழ்ப்பாணத்தில் கடந்த ஆறு வருடங்களில் 400 போராளிகளை நாம் இழந்துள்ளோம். இதில் 300 போராளிகள் எம்முடன் கலந்துள்ள எம் இனத்தவர்களினாலேயே காட்டிக் கொடுக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

யாழ்மாவட்டத்தில் இருந்து வெளியேறிய பின்னர் மொத்தம் 9 ஆயிரம் போராளிகளை நாம் இழந்துள்ளோம். எங்களுடைய போராளிகள் ஒவ்வொருவரும் எம்மினத்தின் விடுதலைக்காகவே போராடி வருகின்றார்கள்.

கடந்த ஆறு வருடமாக குடாநாட்டில் எமது செயற்பாடுகளின் அளவு மிகக் குறைவு.

தமிழ் மக்கள் இப்படித்தான் இருப்பார்கள் என்று யாரும் எடைபோடமுடியாது. மக்களுடைய மனதில் என்னென்ன விடயங்கள் ஆழமாகப் பதிந்துள்ளன என்பது மக்களுடைய முடிவுகளில்தான் தங்கியுள்ளது.

இந்திய இராணுவம் இந்த மண்ணில் நிலைகொண்டபோது எம்மக்கள் எந்த நிலையில் இருந்தாகள் என்பது எல்லோருக்கும் தெரியும். அண்மையில்கூட இந்திய முன்னாள் தூதுவர் டிக்சிற் எழுதிய நூலில் யாழ்ப்பாணத்து மக்கள் எப்படியான திடீர் முடிவுகளை எடுப்பார்கள் என்பதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

- இன்று அரசுடன் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் ரணிலின் விருப்பத்தாலோ அன்றி சிங்கள மக்களின் அனுதாபத்தாலோ ஏற்பட்ட ஒன்றல்ல. இதனைத் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். மக்களுக்கான தேவையையும் சேவையையும் உண்மையாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

நாங்கள் புள்ளடி அரசியலுக்காக இங்கு வரவில்லை. இன்று அரசுக்கு 13 நாடுகள் உதவி செய்கின்றன. இவர்களுக்கும் சேர்த்துத்தான் அடி கொடுத்துக்கொண்டு இருக்கின்றோம். எம்முடன் சிங்கள நாடு மட்டும் போரிடுவதாக இருந்தால் அவர்களைக் கொழும்புவரை அடித்துத் துரத்திவிட்டு நாட்டைப் பிரித்துக் கொண்டிருப்போம். இதற்கான துணிவு எம்மிடம் உண்டு. - என்றார்.

விடுதலைப் புலிகளின் அரசியற்றுறை மகளிர் அணி யாழ்.மாவட்டப் பொறுப்பாளர், கோப்பாய் பிரதேச செயலாளர் க.கேதீஸ்வரன், தமிழ்க் கூட்டமைப்பைச் சேர்ந்த சி.வி.கே. தங்கவேல், நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் க.கிருஷ்ணராசா உட்பட பலர் உரையாற்றினர். (ம-86)

# முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி. பதவி விரைவில் பாயிஸுக்கு வழங்கப்படும்

கொழும்பு,மே28

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஹப்ரத்தின் ராஜினாமாவால் ஏற்பட்டிருக்கும் வெற்றிடத்திற்கு புத்தளம் நகரசபையின் முன்னாள் நகரபிதா கே.பாயிஸ் நியமிக்கப்படலாம். முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் பீட உறுப்பினர் ஒருவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடமேல் மாகாணத்திற்கு சுழற்சி முறையில் வழங்கப்படும் இந்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவி, பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ள கே.பாயிஸுக்கு வழங்கப்படும் என்று அமைச்சரும், கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீம் ஏற்கனவே அறிவித்திருந்தமை தெரிந்ததே. (ம)

## பணியாளர் கௌரவிப்பு

அரியாலை,மே28

தெல்லிப்பழை பல.நோ.கூ.சங்கத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்ற பணியாளர்கள் மூவர் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதுதொடர்பான நிகழ்வு நாளை புதன்கிழமை முற்பகல் 11மணிக்கு சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் நலன்புரிச்சங்கத் தலைவர் து.சிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆர்.கதிர்காமநாதன்,க.நடராஜா, திருமதி செ.சின்னம்மா ஆகியோரே இவ்வாறு கௌரவிப்புப் பெறவுள்ளனர். (எ-17)

## 'ருகுணுபுர' கப்பல் அரிசியுடன் வரும்

யாழ்ப்பாணம்,மே28

யாழ். செயலகத்துக்கென 9ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை ஏற்றிக்கொண்டு 'ருகுணுபுர' கப்பல் விரைவில் இங்கு வருகைதரவுள்ளது.

இதேவேளை, இந்தியாவில் இருந்தும் ஒரு தொகுதி அரிசியை ஏற்றிக் கொண்டு மற்றொரு கப்பல் யாழ். வரவுள்ளது.

இந்த இரண்டு கப்பல்களிலும் அரசி எடுத்து வரப்பட்டதும் ஜூன் மாதத்துக்கான நிவாரண விநியோகம் ஆரம்பமாகும் என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-10-8)

# செய்திச்சரம்

## பயணப்பொதி மீட்பு

தென்மராட்சி,மே28

பளை, கரந்தாய் பகுதியில் உள்ள கடையொன்றில் பயணியொருவரால் கைவிடப்பட்ட திறப்புகள் அடங்கிய பயணப் பொதி ஒன்று உள்ளதாகவும், உரியவர் ஆதாரங் காட்டி அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் - கடை உரிமையாளர் அறிவித்துள்ளார். (எ-117)

## புதிய ஓட்டோ வழங்கப்பட்டது

இணுவில்,மே28

யாழ்ப்பாணம் நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்திற்கு திருகோணமலை தலைமை செயலகத்தால் புதிய ஓட்டோ வாகனம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இவ்வலுவலகத்திற்கு முன்பு வாகனங்கள் எதுவும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-13)

## மக்கள் விசனம்

இணுவில்,மே28

கோண்டாவில் பொதுநூலக புனரமைப்புப் பணி மந்தகதியில் நடைபெறுவதாக அப்பகுதி மக்கள் தெரி விக்கின்றனர். புனரமைப்புப் பணியாளர்களின் வருகையும் சீரின்மையாகக் காணப்படுகின்றது. இதனால் புனரமைப்புக்காக ஒதுக்கப்பட்ட கட்டடப் பொருள்கள் சிதைவடைவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ம-13-ரி)

## சங்கம் உதவி

புலோலி,மே28

வடமராட்சி கிழக்கு ஆழியவளை, உடுத்துறை, வத்திராயன், தாளையடி, செம்பியன்பற்று, மாமுனை, ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து முல்லைத்தீவு பிரதேசத்தில் வசித்துவந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறு மீளக்குடியமரும் மக்களின் நலன்கருதி வடமராட்சி கிழக்கு ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தினர் அவர்களின் உடைமைகளைக் கொண்டு செல்ல வாகன வசதிகள் வழங்குவதுடன் பணிகளை மேற்கொள்ள சங்கக் கிளைகளையும் திறந்து வருகின்றது. (ம-13-ரி)

## சனசமூக நிலையத்தின் முற்போக்குப் பணிகள்

அளவெட்டி,மே28

அளவெட்டி மேற்கில் புதிதாக அமைக்கப்பட்ட முற்போக்கு வாலிபர் சனசமூக நிலைய கட்டடத்தில் மக்களுக்கான முனனேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

படிப்பறை, நூல் , நிலையம் போன்றவற்றைக் கொண்ட இந்த நிலையத்தில் மாணவர்களுக்கான இரவு வகுப்புக்கள், பாலர் பாடசாலை என்பன நடைபெறுவதுடன், வறுமைகோட்டின் கீழ் உள்ள 16 குடும்பங்களுக்கு தலா 38 ஆயிரம் ரூபா கடனும் நிலையத்தால் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் போரூட் நிறுவன உதவியுடன் 15 மலசலகூட அமைப்பு நடவடிக்கைக்காக தலா 10 ஆயிரம் கடன் உதவியையும் பெற்றுக் கொடுத்துள்ளது. (ம-13-ரி)

## மக்களுக்குப் பயன்

அளவெட்டி,மே28

மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிராமிய வங்கியினால வழங்கப்படும் வட்டி வீதமானது ஏனைய அரச, தனியார் வங்கிகளை விட கூடுதலான அளவில் காணப்படுவதால் மக்கள் கூடுதலான பலனைப் பெறுகின்றனர் என சங்க வட்டாரங்கள் [illegible] தெரிவித்துள்ளன. (ம-13-ரி)

மட்டக்களப்பில் 15இற்கும் மேற்பட்ட

# இந்து ஆலயங்களில் இருந்து ராணுவம் வெளியேறவில்லை

## ஒன்றியம் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,மே28

அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 15இற்கும் மேற்பட்ட இந்து ஆலயங்களிலிருந்து பொலீஸ் மற்றும் படையினர் இன்னமும் வெளியேறவில்லை.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியம் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது.

உடன்படிக்கைக்கு அமைவாக வழிபாட்டிடங்களை விட்டு 30நாள்களுக்குள் படையினர் வெளியேறியிருக்க வேண்டும். எனினும் 92நாள்கள் கடந்துள்ள நிலையிலும் இன்றுவரை படையினர் அவற்றிலிருந்து வெளியேறவில்லை என ஒன்றியம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக கொம்மாந்துறை தெய்வி அம்மன் ஆலயம், ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் என்பன தொடர்ந்தும் இராணுவ முகாமிற்குள் அமைந்துள்ளன.

கும்பம்வெளி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் ஆகியவற்றில் தொடர்ந்தும் விசேட அதிரடிப்படை முகாம்கள் அமைந்துள்ளன. இவை முறையே சிற்றுண்டிச்சாலை, ஆயுதக் களஞ்சியம் என்பனவாக படையினரால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவிடம் கேட்டபோது -

விசேட அதிரடிப்படையினர் ஆலயங்களில் தங்கியிருப்பது பாதுகாப்பு அமைச்சின் விவகாரங்களுக்குள் வருவதல்ல என்றும் -

இது உள்துறை அமைச்சகம் கையாளும் விடயம் என்றும் -

அவர் குறிப்பிட்டார். (ஜ-9)

தென்மராட்சியில் சில இடங்களில்

# மீளக்குடியமர அதிகாரிகள் அனுமதி ஆனால் சிப்பாய்கள் தடுக்கின்றனர்

தென்மராட்சி,மே28

தென்மராட்சியில் இராணுவ அதிகாரிகளால் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட சில பகுதிகளில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள படையினர் அங்கு மீளக் குடியமரச் செல்லும் மக்களைத் திருப்பி அனுப்புவதாகப் பொதுமக்கள் தரப்பில் கூறப்படுகிறது.

சாவகச்சேரி கோவில்குடியிருப்புப் பகுதியின் கடற்கரையை அண்டிய பகுதிகளில் மீளக்குடியமரச் சென்ற மக்களை படையினர் தடுத்ததாகக் கூறப்படுகிறது.

காவலரண்களுக்கு முன்பாக - குடியிருப்பு ஊடாக - முட்கம்பி வேலி அமைக்கப்பட்டு வருவதாகவும் - முட்கம்பி வேலிக்குள் பல குடும்பங்கள் மீளக் குடியமர்வதற்கான ஆயத்தங்கள் மேற்கொண்ட போதிலும் அதற்கு படையினர் அனுமதி மறுத்ததாகவும் - கூறப்பட்டது.

இதேவேளை, சாவகச்சேரி நகர சபைத் தொழிலாளர் விடுதியின் ஒரு பகுதியில் மீளக் குடியமர படை அதிகாரிகள் அனுமதி வழங்கியபோதிலும் அங்கு கடமையாற்றும் சிப்பாய்கள் அதனைத் தடுத்து மூன்று மாதங்களின் பின்னர் வருமாறு நகர சபைத் தொழிலாளர்களிடம் தெரிவித்ததாகவும் கூறப்பட்டது. (ஒ-117)



காரைநகர் மணிவாசகர் சபையினால் நடத்தப்பட்ட சைவ சமய அறிவுப் பரீட்சையின் பரிசளிப்பு விழா அண்மையில் ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெற்றது.

இந்தப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற காரைநகர் தியாகராஜா மத்திய மகாவித்தியாலய மாணவி கந்தசாமி சித்திர பானுவுக்கு அருட்கவி சி.விநாசித்தம்பிப் புலவர் தங்கப் பதக்கம் அணிவித்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (எ-73)

# பளைப் பிரதேசத்தின் மீள்கட்டுமானத்துக்கு ஆக்கபூர்வமான சில ஆலோசனைகள்

பளையூரான்

பளைப் பிரதேசம், கிளிநொச்சி மாவட்டத்தின் எல்லைக்குள் அமைந்திருக்கிறது. ஆயினும் 1990ஆம் ஆண்டு 'ஈழப்போர்' உக்கிரம் அடைந்த காலம் முதலாக இப்பிரதேசம் யாழ். மாவட்டத்துக்கும், கிளிநொச்சி மாவட்டத்துக்கும் இடைப்பட்ட ஒன்றாகி விட்டது. 'எடுப்பார் கைப்பிள்ளையாகி' அங்குள்ள மக்கள் மிகவும் சிரமப்பட்டனர். அவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் 2000ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் இடம்பெற்ற இடப்பெயர்வுச் சம்பவம் அமைந்தது.

அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்து சரியாக இரண்டு வருடங்கள் கழித்து, பின்னர் பளைப் பிரதேச மக்கள் தமது இடங்களைப் பார்வையிடச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

தமது வீடுகளைப் பார்வையிடச் சென்ற மக்கள் யுத்தத்தின் கோரத் தாண்டவத்தினால் பளைப் பிரதேசம் முழுவதுமே சின்னாபின்னமாகிக் கிடப்பதை கண்ணுற்றனர். போதாக் குறைக்கு வீடுகளில் இருந்த உடைமைகள் வேறு சூறையாடப்பட்டிருந்தன.

இவ்வாறான சூழ்நிலையில் பளைப் பிரதேச மக்கள் மிகுந்த பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர்.

இத்தகைய கள நிலையில் தற்போது பளைப் பகுதியில் பொது நிர்வாகத்தை முடுக்கிவிடும் நடவடிக்கைகளில் அரச அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது. அப்பகுதியில் விரைந்து இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த முனையும் தரப்பினருக்கு சில ஆலோசனைகளை முன்வைக்க விளைகிறேன்




☆ முதலில் பளைப் பிரதேசத்தில் வெளிநாட்டு நிறுவனங்களின் ஆதரவுடன் மருத்துவமனை ஒன்றை நிறுவுதல்.

☆ அப்பகுதியில் கூட்டுறவுக் கடைகளை ஆரம்பித்தல்.

☆ முதற்கட்டமாக அரச உத்தியோகத்தர்களை மீளக் குடியமர்த்துதல். அவர்களின் வீடுகளை அரசு புனரமைப்புச் செய்து கொடுத்தல் வேண்டும். சமகாலத்தில் அரச அலுவலகங்கள், பாடசாலைகள் என்பவற்றையும் புனரமைத்தல். இவற்றுக்கு 3 மாத காலம்வரை ஒதுக்கலாம்.

☆ இரண்டாம் கட்டமாக ஏனைய பொதுமக்களை குடியமர்த்தல். அவர்களின் வீடுகளை அரசு புனரமைப்புச் செய்து கொடுத்தல்.

☆ அடுத்து அங்குள்ள சைவ (22), கிறிஸ்தவ (12) ஆலயங்களை புனரமைத்தல். இவற்றுக்காக 6மாத காலம்வரை ஒதுக்கலாம்.

☆ இச்செயற்பாடுகள் யாவற்றையும அரசு - புலிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இணைந்த குழு ஒன்று கண்காணித்தல்.


☆ இறுதிக்கட்டமாக, கிராம அலுவலர்களிடம் உள்ள தகவல்களின் பிரகாரம் வர்த்தகர்களுக்கு நஷ்ட ஈடுகளை வழங்கல்.

இச் செயற்பாடுகளை பரந்தநோக்கில் முன்னெடுப்பதற்கு சகலரும் ஒத்துழைத்தால் விரைவில் பளைப் பிரதேசம் அதன் முன்னைய நிலையை அடைந்துவிடும்.

இந்நடவடிக்கைகள், தென்மராட்சி மற்றும் வடமராட்சி கிழக்குப் பிரதேசங்களிலும் முன்னெடுக்கப்படும்போது தான், யுத்தத்தில் ஈடுபட்ட தரப்புக்கள் அப்பகுதி மக்களின் மனங்களை வெல்வது சாத்தியமாகும். ☆


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
16 - 08 - 1940



இறைவன் அடியில்
28 - 04 - 2002

### அமரர் வீரகத்தி திரவியம்

*எங்கள் அன்பு அப்பாவே!*
*எத்தனை இன்பங்கள் வந்தபோதும்*
*நீங்கள் இல்லா உலகில் மகிழ்ச்சியேது?*
*எங்கள் இதயத்தை மகிழ்விக்க*
*வாருமையா எம்மிடத்தே!*

- மனைவி,
பிள்ளைகள், மருமகன்.

*82/9, 3ஆம் ஒழுங்கை,*
*பருத்தித்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(4256)


## நல்லூரில் திருட்டு

யாழ்ப்பாணம்,மே28

யாழ்ப்பாணப் பகுதியில் திருடர்கள் மீண்டும் தமது கைவரிசையைக் காட்ட ஆரம்பித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு நல்லூர் வைமன் வீதியிலுள்ள வீடொன்றில் இருந்து டெக், கை மணிக்கூடு, இரண்டாயிரம் ரூபா ரொக்கப்பணம் ஆகியவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

ரீ.வியில் படம் பார்த்துவிட்டு வீட்டுக்காரர்கள் உறங்கிய பின்னர் வீட்டின் கூரை ஓட்டைப் பிரித்து உள் நுழைநத திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

கடந்த ஈராண்டு காலத்தில் இந்த வீட்டில் மூன்றாவது தடவையாக இத் திருட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

கடந்த சில வாரங்களாகக் குறைந்திருந்த திருட்டு நடவடிக்கைகள் மீண்டும் அதிகரித்திருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (ம-15)

## மெய்வன்மைப் போட்டி

துணைவி அ.த.க. வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சென் ஸ்ராா் விளையாட்டு மைதானத்தில் அதிபர் கா.சிவனேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-ரி)

## கூட்டம்

பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர், பொதுமுகாமையாளர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழ்மை முற்பகல் 11மணிக்கு யாழ். பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு உதவி ஆணையாளர் எஸ்.கணேசமூர்த்தி தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறும். (எ-17)


## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும்
தாதிய உத்தியோகத்தர்
திருமதி லீலாவதி பிற்றர் இராசநாயகம் அவர்களது அன்புத் தாயார்

### திருமதி க.சின்னம்மா

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

தாதியர் நலன்புரிச் சங்கம்,
*யாழ். போதனா வைத்தியசாலை.*
(4253)

## கண்ணீர் அஞ்சலி

எமது கடற்றொழில் திணைக்கள சக உத்தியோகத்தர்
திரு.ந.கணேசமூர்த்தி (கடற்றொழில் பரிசோதகர்)
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி நடர்ராசா கனகம்மா

அவர்கள் 26.05.2002இல் காலமானதையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன அமரரின் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள்,
கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களம், யாழ்ப்பாணம்.
(4252)

## கண்ணீர் அஞ்சலி

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவரும்
யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான
திரு.அ.விநாயகமூர்த்தி
அவர்களின் அன்புத் துணைவியார்

### திருமதி தையல்நாயகி விநாயகமூர்த்தி

அவர்களது மறைவையொட்டி அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மசாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

இ.தெய்வேந்திரம்பிள்ளை
குடும்பத்தினர்.
*எழுதுமட்டுவாழ் தெற்கு.* (C/22311)

## மரண அறிவித்தல்

### திருமதி தவமணி கைலாயநாதன்

கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வதிவிடமாகக்கொண்ட திருமதி தவமணி கைலாயநாதன் அவர்கள் நேற்று (27.05.2002) திங்கட்கிழமை காலையில் இயற்கை எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் சின்னத்துரை கைலாயநாதன் அவர்களின் ஆருயிர் மனைவியும் சர்மிலா, சசிகலா, விஜித்தா, பிரதீபன் (தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை), சுஜீத்தா, சுரேக்கா (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் நல்லம்மா, வேலாயுதபிள்ளை, தங்கரத்தினம், மகேஸ்வரி, பூமணி, சண்முகசுந்தரம், பரமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பொன்னையா, திலகவதி, குமாரசாமி, துரைராஜா, நடராஜா, மகேஸ்வரி, சந்திரவதனி, நவமலர்தேவி, காலஞ்சென்றவர்களான குணரத்தினம்மா, சண்முகநாதன் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (28.05.2002) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கைலாயநாதன்
(கணவர்)

*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*
(4232)

# தென்மராட்சி ஆசிரியர்களுக்கு கல்வி செயலமர்வு இன்று ஆரம்பம்

சாவகச்சேரி,மே28

தென்மராட்சி வலயக் கோட்டக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலைகளின் நிரந்தர மற்றும் பகுதிநேர ஆசிரியர்களுக்கான கல்விச் செயலமர்வு வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் குறிப்பிட்ட நாள்களில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை நடைபெறவுள்ளதாக தென்மராட்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

செயலமர்வுகளின் விவரங்கள் பின்வருமாறு:-

★ இன்றும் நாளையும் தரம் 6 முதல் 11வரை - ஆங்கிலம்.

★ எதிர்வரும் 30 மற்றும் 31ஆம் திகதிகளில் உயர்தரம் - ஆங்கிலம்.

★ சங்கீதம் - வாத்தியப் பயன்பாடு ஜூன் 1ஆம் திகதி நரம்பு வாத்தியம், 2ஆம் திகதி தோல் வாத்தியம்.

★ ஜூன் 4 மற்றும் 5ஆம் திகதிகளில் தரம் 6முதல் 11வரை - தமிழ்.

★ ஜூன் 7,8 மற்றும் 15ஆம் திகதிகளில் கணிதம் - உபகரணம் தயாரித்தல்.

★ ஜூன் 8ஆம் திகதி விஞ்ஞானம் - உபகரணம் தயாரித்தல்.

★ ஜூன் 6ஆம் திகதி ஆரம்பப் பிரிவுக்கான இலகு உடற்கல்வி.

★ ஜூன் 8ஆம் திகதி யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் 'செஸ்'.

★ ஜூன் 10ஆம் திகதி 'பட்மின்ரன்'.

★ ஜூன் 14ஆம் திகதி அழகியல் தரம் 6 - நடனம், சித்திரம்.

★ ஜூன் 15ஆம் திகதி தரம் 6 - சித்திரம், சங்கீதம்.

★ ஜூன் 21ஆம் திகதி - உயர்தரம் - 'இசற்' ஸ்கோர்.

இச்செயலமர்வுகளில் பங்கேற்கும் ஆசிரியருக்கான போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும்-

சங்கீதபாட ஆசிரியர்கள் 'வயலின்' கருவிகளைக் கொண்டுவருமாறும் - அறிவிக்கப்பட்டது. (ஒ-31)

# புத்தளம் ஐ.தே.க. எம்.பிக்கு எதிராக ஒழுங்கு விசாரணை

கொழும்பு,மே28

புத்தளம் மாவட்ட ஐ.தே.க. எம்.பி. பாலித ரங்க பண்டாரவுக்கு எதிராக ஒழுங்கு விசாரணை நடத்தும்படி கட்சியின் பிரதித் தலைவரான அமைச்சர் கருசூரியவுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டிருக்கிறார்.

வெளிநாட்டு விஜயத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் பிரதமர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார் என்று ஐ.தே.க. தலைமை அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 20ஆம் திகதி புத்தளம் பொலீஸ் நிலையத்தில் நடைபெற்ற சம்பவத்தை அடுத்தே ரங்க பண்டாரவுக்கு எதிராக ஒழுங்கு விசாரணை நடத்தப்படவிருக்கிறது.

அம்பாந்தோட்டை மாவட்ட எம்.பி. திலிப் வெத ஆராச்சிக்கு எதிராகவும் ஒழுங்கு விசாரணை நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே28

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரின் ஏற்பாட்டில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு நல்லூர் ஸ்ரீசட்டநாதர் சுவாமி தேவஸ்தானத்தில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை நடைபெறுகிறது.

காலை 10 மணிக்கு ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில் திருஞானசம்பந்தர்மூர்த்தி நாயனாரின் மூலப் பதிகங்கள் முற்றோதல் இடம்பெறும். (ஒ-6)

★ ★ ★

கோப்பாய்,மே28

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி இந்து மன்றத்தினால் நடத்தப்பட்டு வரும் 63 நாயன்மார் குருபூசை வரிசையில் இன்று செவ்வாய்க்கிழமை வைகாசி மூலப பெருநாளன்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் மற்றும் சிவசோதியில் கலந்த முருக நாயனார், திருநீல நக்க நாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் ஆகியோருடைய குருபூசைகள் இடம்பெறவுள்ளன.

விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். மாணவர்களது பிரார்த்தனை உரைகளும் இடம்பெறவுள்ளன. (ஒ-72)

★ ★ ★

சாவகச்சேரி,மே28

சாவகச்சேரி தென்னிந்தியத் திருச்சபை ஆலயம் சேதமடைந்துள்ளதைத் தொடர்ந்து அருகில் உள்ள திருச்சபை மண்டபத்தில் பிரதி ஞாயிறு தோறும் வழிபாடுகள் நடைபெற்று வருவதாகத் தேவாலய குரு வணக்கதுக்குரிய ரி.எச்.வசந்தகுமார் தெரிவித்தார். தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசனால் மீள் பிரதிஸ்டை செய்யப்பட்ட பின்னர் இவ்வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-31)


Computer Courses
Dip. in Ms Office
ஆரம்பம்: 01.06.2002 காலை 11 மணி
குறிப்பு: அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
ஆங்கிலக் கல்லூரி
சந்நிதி வீதி, அச்சுவேலி. (4255)

SPOKEN ENGLISH WITH GRAMMAR
By: B.Manoharan
ஆரம்பம்: நாளை (29-05-2002)
புதன்கிழமை காலை 8 மணி
ஆங்கிலக் கல்லூரி
சந்நிதி வீதி,
அச்சுவேலி.
(வாரத்தில் 5 வகுப்புகள்) (4254)


# வற்றாப்பளை சென்றவர் விபத்தில் பலி!

யாழ்ப்பாணம்,மே28

வற்றாப்பளை அம்மன் கோயில் உற்சவத்திற்காக நேற்றுமுன்தினம் நள்ளிரவு உடையார்கட்டில் இருந்து சைக்கிளில்சென்ற குடும்பஸ்தர் ஒருவர் புதுக்குடியிருப்புப் பகுதியில் லொறியுடன் விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

சுதந்திரபுரம் சந்தி, உடையார்கட்டைச் சேர்ந்த மகேந்திரராஜா ரஞ்சித்குமார் (வயது 34) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

நள்ளிரவு 12 மணியளவில் நடந்த இந்த வீதி விபத்தில் காயமடைந்த நபரை புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்து அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ்மூலம் அழைத்துவரப்படும் போது வழியில் இவர் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

இவரது சடலம் மரண விசாரணைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாகத் தமிழீழ காவற்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ஒ-6-9)

# இரவுக் கடமையில் யாழ். பொலீஸார்

யாழ்ப்பாணம்,மே28

நீண்டகால இடைவெளியின் பின்னர் யாழ்நகரில் நேற்று இரவு போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் பொலீஸார் வீதி ஒழுங்குப் பணிகளை மேற்கொண்டிருந்தனர்.

நாடளாவிய ரீதியில் வருடத்தில் ஒரு நாள் இரவுநேர வீதிப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப்பணியை பொலீஸார் மேற்கொள்வது வழக்கமென்றும் -

அந்த அடிப்படையில் நேற்றிரவு போக்குவரத்து கண்காணிப்புப் பொலீஸார் 12பேர் கடமையில் ஈடுபட்டதாகவும் -

யாழ். பொலீஸ் நிலைய போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலீஸ் அதிகாரி தெரிவித்தார். (ஒ-6-9)

# தடுக்கி விழுந்து தொழிலாளி காயம்

யாழ்ப்பாணம்,மே28

புத்தளத்தில் லொறியில் பொருள்கள் ஏற்றிக்கொண்டிருந்த சமயம் தடுக்கி வீழ்ந்து காயமுற்ற தொழிலாளி ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாவற்குழியிலிருந்து இடம்பெயர்ந்து 2ஆம் குறுக்குத்தெருவில் வசித்துவரும் ராசதுரை சசிகுமார் (வயது 28) என்பவரே காயமடைந்தவராவார். இவர் யாழ்ப்பாணத்தில் இருந்து தென்பகுதிக்கு வேலை நிமித்தம் சென்றிருந்தசமயம் இந்த விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஒ-9-6)

# தீவைப்புச் சம்பவத்தில் முன்னாள் பொலீஸ் கைது

கொழும்பு,மே28

மொனறாகலையில் சினிமா நடிகை அனோஜா வீரசிங்கவின் வீட்டுக்குத் தீவைத்த சம்பவம் தொடர்பாக பொ.ஐ.மு. அரசின் முன்னாள் பிரதியமைச்சர் ஒருவரின் மெய்ப்பாதுகாவலர் உட்பட மூவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

விசேட பொலீஸ் குழுவினால் கைதுசெய்யப்பட்ட அம்மூவரும் தாங்கள் அச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருப்பதை ஒப்புக்கொண்டனர் என்று பொலீஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மெய்ப்பாதுகாப்பு அதிகாரி மொனறாகலை மாவட்ட பொலீஸ் நிலையம் ஒன்றைச் சேர்ந்த பொலீஸ்காரர் ஆவார்.


ராஜா யாழ்ப்பாணம்
31.05.2002 - 50ஆவது நாள்
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
தமிழன்
தினசரி: 10.30, 2.30
சனி, ஞாயிறு: 10.30, 2.30, 5.30 (பு.நே.)
27-05-2002 தொடக்கம் படம் பார்க்கும் 3 அதிர்ஷ்டசாலிகளுக்கு கடைசித் தினத்தில் பணப்பரிசில்கள் காத்திருக்கின்றன. ரீக்கெற்றுகளை கவனமாக வைத்திருக்கவும். (C/22146)

நாகம்ஸ் சுன்னாகம்
மாதவன், சிம்ரன், பிரகாஷ்ராஜ் மற்றும் வசுந்தராதாஸ் நடிப்பில்
கன்னத்தில் முத்தமிட்டால்
(நீல்ஸ்)
காட்சிகள்: 11.00,3.00 (புதிய நேரம்) (4186)

நிறைஞ்சனாஸ் சங்கானை
LEONARD DIC APRIO
KATE WINSLET
டைட்டானிக்
(தமிழாக்கம்)
காட்சிகள்: 10.30, 2.30, 5.30 (C-22147)


# மாவட்டக்குழு கலைப்பு விவகாரம்; முஸ்லிம் காங்கிரஸ் பின்வாங்கியது

கொழும்பு,மே28

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்டச் செயற்குழு கலைப்பு விவகாரத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப்பீடம் தனது முன்னைய நிலையில் இருந்து பின்வாங்கியது. அச்செயற்குழு கலைக்கப்படவில்லை, அது தொடர்ந்து செயற்படலாம் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப்பீடம் இப்பொழுது தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் அம்பாறை மாவட்டச் செயற்குழு கலைக்கப்பட்டதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைமை அறிவித்தது. அதனை எதிர்த்து செயற்குழுவின் செயலாளர் ஏ.எல்.எம். யாசின், கல்முனை பிரதேச சபை முன்னாள் தவிசாளர் ஐ.ஏ.அமீது ஆகியோர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். வழக்கில் கலைப்புக்கு எதிராகத் தடை உத்தரவு வழங்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து இரண்டு தரப்பினருக்கும் இடையே சமரச முயற்சி நடைபெற்றது. செயற்குழு கலைக்கப்படவில்லை. அது தொடர்ந்து செயற்படலாம் என்று முஸ்லிம் காங்கிரஸ் அதியுயர் பீடம் தீர்மானம் நிறைவேற்றியது. இதன் அடிப்படையில் வழக்காளிகள் வழக்கை வாபஸ் பெறவேண்டிக் கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

கட்சியின் ஒற்றுமை கருதி வழக்காளிகள் தமது வழக்கை இன்று கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வாபஸ்பெற இணக்கம் தெரிவித்தனர் என்று அம்பாறை மாவட்ட செயற்குழுச் செயலாளர் ஏ.எல்.எம்.யாசின் தெரிவித்திருக்கிறார். (ஒ)

# சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம்,மே28

தொண்டமனாறு உடுப்பிட்டி வீதியில் உள்ள வீட்டின் முற்றத்தில் பூட்டப்பட்டு நின்ற இரு சைக்கிள்கள் காணாமற்போனதாக நெல்லியடிப் பொலீஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. (ஒ-9-6)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்னுத்துரை சின்னம்மா

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி பொன்னுத்துரை சின்னம்மா நேற்று (27.05.2002) திங்கட்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் மாரிமுத்து பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் இராஜநாயகம் லீலாவதி (தாதி உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை) அவர்களின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற பீற்றர் இராஜநாயகத்தின் அன்பு மாமியாரும் அலன் பிரசாந்தின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் பொன்னுத்துரை (எஸ்.போ) இராசமணி, மங்கையர்க்கரசி, சரவணமுத்து, பரமேஸ்வரி, இராசேஸ்வரி, சரத்சந்திரன், சொல்வேந்தன் (யாழ். இலங்கை வங்கி) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக நாளை (29.05.2002) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி இராஜநாயகம் லீலாவதி (மகள்)

*733, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(4257)

## ஆறுமுகம் வேலுப்பிள்ளை

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட ஆறுமுகம் வேலுப்பிள்ளை அவர்கள் நேற்று (27.05.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற உருத்திரகணேசன், இரவீந்திரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற இந்துமதி, சந்திரவதனா (அல்வாய்), லீலாவதி (அல்வாய்), காலஞ்சென்ற சுரேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பிறேமளா, குகன் (கொழும்பு) ஆகியோரின் பெரிய தந்தையும் இராசமணி (இந்தியா), சு.தர்மலிங்கம் (ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர், சாவகச்சேரி), கனகசபாபதி (கூட்டுறவு உதவி ஆணையாளர் - வவுனியா), காலஞ்சென்ற சிவபாலன் ஆகியோரின் அன்பு மாமனும் தர்சனா (பொறியியலாளர், கொழும்பு), பிரதீபன் (யாழ். பல்கலைக்கழக விவசாயபீட மாணவன்), சாந்தனா, ஐங்கரன் (மருத்துவபீட மாணவன், இந்தியா), கலைச்செல்வி சிவகுமார் (கனடா), அகிலன் (கனடா), கலைவாணி, காலஞ்சென்ற சுபாசினி, அக்சனா (கொழும்பு) ஆகியோரின் பேரனும் கனகசபாபதி (உள்ளூராட்சி எழுதுநர், வல்வெட்டித்துறை), பரமேஸ்வரி நடராஜா (வைத்தியர் - சிங்கப்பூர்), இராஜரட்ணம் (மலேசியா), நவரட்ணம் (மலேசியா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.05.2002) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக அவரது இல்லத்திலிருந்து பருத்தித்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.கனகசபாபதி (மருமகன்)

*'இந்திரகிரி'*
*அல்வாய் தெற்கு,*
*அல்வாய்.*
(C/22313)

## திருமதி ஞானப்பிரகாசம் மேரி மாகிறேற்

பத்தாவத்தையைப் பிறப்பிடமாகவும் நாவற்குழி புனித அந்தோனியார் கோயிலடியை வசிப்பிடமாகவும் தற்போது 7/1, மத்தியூஸ் வீதியில் வசித்தவருமான திருமதி ஞானப்பிரகாசம் மேரி மாகிறேற் அவர்கள் நேற்று (27.05.2002) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் ஞானப்பிரகாசத்தின் அன்பு மனைவியும் பற்றிமா மலர் (பனை அபிவிருத்திச் சபை, எழுதுநர் - யாழ்./கிளிநொச்சி), சூசைநாதர் (சிக்மா வோட்டர் பம்ப் - கொழும்பு), மேரிலூட்ஸ் (அரச முதியோர் இல்லம், கைதடி), லூர்துமேரி, புதுமைமலர், ஞானாமிர்தம் (ஆசிரியை, யா/நாவற்குழி ம.வி.), யேசுதாசன் (டோகா), மேரிகிறேஸ் (அன்பு அச்சகம், கிளிநொச்சி), றோசலின் ஈஸ்வரி (கொழும்பு), இம்மனுவேல் ஈஸ்வரன் (இசையரசி மிதிவண்டி சீர்களம், நாச்சிக்குடாச் சந்தி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நீக்கிலாஸ், சந்திரா, கனகரத்தினம், அன்ரனிராஜ், மரியநாயகம், சியாமளா, காலஞ்சென்ற கனகசுந்தரம், ஜெகன், சொரூபினி ஆகியோரின் அன்பு மாமியாரும் கலிஸ்ரா, சுஜித்திரா, அன்ரன், அனிற்றா, கசில்டா, டிலானி, றெபேக்கா, அருள்ராஜ், மரியராஜ், மரியமலர், ஜீவமலர், புஷ்பமலர், டிறோன், யேசுதன், கஜனி, கனியூட், கஜன், சையூட், சங்கீதா, விதுஷனா, கீர்த்தனா ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (29.05.2002) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் யாழ். மரியன்னை தேவாலயத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நீ.பத்திமாமலர் (மகள்)

*7/1, மத்தியூஸ் றோட்,*
*யாழ்ப்பாணம்,*
(4259)

## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை
ஆசிரியை **திருமதி ச.திருச்செல்வம்** அவர்களின்
அன்புத் தாயார்

**திருமதி மாரிமுத்து இலட்சுமிப்பிள்ளை**

அவர்கள் 24-05-2002 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சாவகச்சேரி.*

அதிபர், ஆசிரியர்கள்,
இந்து ஆரம்ப பாடசாலை.

(C/22312)

# புலிகள் மீதான தடை நீக்கம்: பிரசெல்ஸில் பிரதமர் பேச்சு!

பிரசெல்ஸ்,மே28

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வசதியாக அந்த அமைப்புமீது உள்நாட்டில் விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்குவது தொடர்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் ரொமானோ புரோடியுடன் பேசியிருக்கிறார்.

இந்த விடயம் குறித்துப் பேசப்பட்டிருக்கிறது என்பதை உறுதிசெய்த ஐரோப்பிய ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் கலாநிதி ஜாவியா சொலானா, அது பற்றிய விவரங்களை வெளியிடவில்லை.

ஐந்து நாள் விஜயம் மேற்கொண்டு பெல்ஜியம் சென்றுள்ள பிரதமர் ரணில், அங்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர்களுடன் பேசிவருகிறார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் ரொமானோ புரோடிக்கும் இடையில் பிரசெலஸில் இடம்பெற்ற பேச்சுக்களை ஐரோப்பிய ஒன்றியத்தின் செயலாளர் நாயகம், செய்தியாளர் மாநாட்டில் உறுதிப்படுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுக்களை வெகுவிரைவில் ஆரம்பிக்க வேண்டும். இந்தப் பேச்சுக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்க நாம் தயாராகவிருக்கிறோம்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவ நாடான நோர்வே இந்தச் சமாதான முயற்சிகளில் பங்குபற்றியுள்ளதையிட்டு நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். சமாதான முயற்சிக்கு எந்தவகையில் நாம் பங்களிப்பை வழங்கமுடியும் என்பது குறித்து நோர்வேயுடன் கலந்துரையாடவிருக்கின்றோம்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உருவாகியுள்ள போர் நிறுத்த உடன்படிக்கை காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து மகிழ்ச்சியடையும் அதேநேரம் உடன் பேச்சுகளை ஆரம்பிக்க முன்வரவேண்டும் என்று அரசிடமும் விடுதலைப் புலிகளிடமும் கோருகின்றோம் - என்றார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத் தலைவருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுகளில அரசு - புலிகள் நேரடிப் பேச்சு, இலங்கையில் இருந்து வந்து சட்ட விரோதமாகக் குடியேறுவோர் விவகாரம் உட்பட பல விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.

பிரதமருடன் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ, பிரதமரின் சர்வதேச ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோரும் பேச்சுக்களில் பங்குபற்றினர்.(ஐ-3-4)

# மூதூர் பயணிகள் கப்பல் பாறையில் மோதிச் சேதம்!

திருகோணமலை,மே28

மூதூரிலிருந்து திருகோணமலை நோக்கி வந்துகொண்டிருந்த 'சேருவில-2' என்ற பயணிகள் கப்பல் நேற்று கடற்பாறை ஒன்றுடன் மோதிச் சேதமடைந்தது.

நேற்று முற்பகல் திருகோணமலை உட்துறைமுகத்தை அண்டிய பாதாள மலை கடற்பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

700 பயணிகளை ஏற்றிக்கொண்டு வந்தவேளை கடற்பாறையுடன் மோதியதைத் தொடர்ந்து கப்பலுக்குள் கடல்நீர் புகுந்துகொண்டது.

கப்பலின் கீழ்த்தளத்தில் இருந்த பயணிகள் கூக்குரலிட்டவாறு மேல் தளத்துக்கு ஓடிவந்தனர்.

இது தொடர்பாகத் திருகோணமலை கடற்படைத் தளத்திற்கு உடனடியாகத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

கப்பல் மாலுமிகள் பலத்த சிரமத்தின் மத்தியில் நீரை வெளியேற்றியவாறு கப்பலைத் திருகோணமலைக் கரைக்குக் கொண்டு வந்துசேர்த்தனர்.

ஏற்படவிருந்த பேராபத்திலிருந்து பயணிகள் காப்பாற்றப்பட்டனர்.

(ஐ-4)

# போர் அபாயம் இன்னமும் நீங்கவில்லை என்கிறார் பாக். அதிபர் முஷாரப்

இஸ்லாமாபாத்,மே28

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஏற்பட்ட போர் அபாயம் இன்னமும் நீங்கிவிடவில்லை.

- இவ்வாறு கூறியுள்ளார் பாகிஸ்தானிய அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப்.

தனது நாட்டு மக்களுக்கு நேற்றுத் தொலைக்காட்சியில் ஆற்றிய உரையிலேயே முஷாரப் இதனைத் தெரிவித்தார்.

அதிபர் முஷாரப் அந்த உரையில் -

"இந்தியா - பாகிஸ்தான் இடையிலான பதற்றநிலை உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. இந்திய நாடாளுமன்றத்திலும், ஜம்முவிலும் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதல்களின் விளைவாகவே தற்போதைய நெருக்கடி எழுந்திருக்கின்றது. ஆனாலும் இது குறித்து இந்தியா அளவுக்கதிகமாகப் பதில் நடவடிக்கை எடுக்கிறது.

பாகிஸ்தான், தீவிரவாதத்துக்கு ஆதரவு தரவில்லை. பாகிஸ்தானிலிருந்து எல்லை தாண்டி தீவிரவாதிகள் இந்தியாவுக்குள் ஊடுருவுவதை நான் அனுமதிக்கப்போவதில்லை."

என்று மேலும் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தின் தொடக்கத்தில் பொதுத் தேர்தல்கள் நடைபெறும் என்பதையும் முஷாரப் இந்த உரையின்போது உறுதிசெய்தார். பாகிஸ்தான் இரண்டு ஏவுகணைப் பரிசோதனைகளை நடத்தியதையடுத்தே அதிபர் முஷாரப்பின் உரை இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)



# அமெரிக்காவுடன் இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தமா?

## அரசுத் தரப்பில் மறுப்பு

கொழும்பு,மே28

அமெரிக்க அரசுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் எதையும் இலங்கை செய்யாது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்காவின் கப்பல்கள், விமானங்கள் ஆகியவற்றுக்கு எரிபொருள் வழங்குதல் மற்றும் அதனோடு சேர்ந்த சேவைகளை வழங்குவது தொடர்பான சேவை உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்வது தொடர்பாகவே இரு தரப்புகளுக்குமிடையே கலந்துரையாடப்பட்டு வருகின்றது. என்றும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்கக் கப்பல்களுக்கும் விமானங்களுக்கும் எரிபொருள் வழங்குவதற்கு ஏற்கனவே சில ஏற்பாடுகளை இலங்கை அரசு செய்துள்ளது.

சர்வதேச மட்டத்தில் வசதிகளை வழங்குவதற்கான உடன்படிக்கைகளைச் செய்துகொள்வதற்கு திட்டவட்டமான காரணம் எதுவும் கிடையாது என்றும் அவர் கூறினார்.

இந்த உடன்படிக்கை தொடர்பாக இதுவரை எந்தவித நகல்களும் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் -

அது இன்னமும் ஒரு பிரேரணையாக மாத்திரமே இருக்கிறது என்றும் அவர் விளக்கமளித்தார்.

இலங்கை வான் பிராந்தியம் மற்றும் தளங்களை அமெரிக்கா பயன்படுத்த வகைசெய்யும் பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றில் இருநாடுகளும் கைச்சாத்திட இருப்பதாக நேற்றுமுன்தினம் வெளியாகி இருந்த செய்திகளை அடுத்தே ஒஸ்ரின் பெர்னாண்டோ இந்த விளக்கத்தை அளித்துள்ளார்.

(ஐ-3-4)

## பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலராக பாலசிங்கம்

திருகோணமலை,மே28

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராக வி:பி.பாலசிங்கம் பதவியேற்றுள்ளார்.

பொது நிர்வாக அமைச்சுச் செயலாளராகப் பணியாற்றிய க.பரமலிங்கம் இந்துகலாசார அமைச்சின் மேலதிக செயலாளராகப் பதவியேற்றதை அடுத்து -

அந்தப் பதவிக்குப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரான திருமதி கமலா சிவசிதம்பரம் இடமாற்றம் செய்யப்பட்டார்.

இதையடுத்து, வெற்றிடமாகிய பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பதவிக்கு பாலசிங்கம் நியமிக்கப்பட்டிருக்கிறார். (ஐ-3)

## படைக்கு ஆள்சேர்க்கும் கால எல்லை நீடிப்பு

இராணுவத்துக்கு ஆள்சேர்க்கும் கால எல்லை மேலும் ஒருமாதம் நீடிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்துக்கு புதிதாக 5ஆயிரம் பேரைத் திரட்டும் நடவடிக்கை கடந்த 8ஆம் திகதி ஆரம்பமானது. எதிர்வரும் 8ஆம் திகதியுடன் முடிவடையவிருந்த இந்தக் கால எல்லை மேலும் ஒருமாத காலம் நீடிக்கப்படுவதாகப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-4)

### தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துத் தெரிவித்தபோதே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அடுத்தமாத இறுதியில் அல்லது ஜூலைமாத ஆரம்பத்தில் தாய்லாந்தில் பேச்சுக்கள் ஆரம்பமாகும். இதன்போது இரு தரப்பினரும் விட்டுக்கொடுப்புக்களுடன் செயற்படவேண்டியிருக்கும்.

பேச்சுக்களில் எந்தெந்த விடயங்கள் குறித்துப் பேசுவது என்பது தொடர்பாக அரசாங்கமும் விடுதலைப் புலிகளுமே தீர்மானிக்கவேண்டும்.

நோர்வே, அனுசரணையாளராக மாத்திரமே செயற்படும். இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுவது மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. - என்றார் ஹெல்கிஸன். (ஐ-4)

### கடலிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிக்கவிருக்கும் கண்காணிப்புப்பணி, படிப்படியாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவுக் கடற்பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும்.

அடுத்த மாதத்தில் மேலும் 10 வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் இலங்கை வருவர். ஏற்கனவே 25 வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தநிறுத்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டு 90 நாள்கள் பூர்த்தியடைந்திருக்கும் நிலையிலேயே கடறகண்காணிப்புப் பணிகள் ஆரம்பமாகின்றன.

கண்காணிப்புக் குழுவின் தலைவரான நோர்வேயின் ரொன்ட் புருகோவிட் அண்மையில் நோர்வே திரும்பி விரிவான அறிக்கை ஒன்றை நோர்வே அரசிடம் கையளித்திருக்கிறார். கடந்த 23ஆம் திகதி அவர் மீண்டும் இலங்கையை வந்தடைந்தார். (ஐ-3)

### வீரமுனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 22ஆம் திகதி திருக்கோயிலில் மோட்டார் சைக்கிளில் வந்த விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரை அதிரடிப்படையினர் வழிமறித்துக் கைதுசெய்து, அவரின் கைகளைப் பின் புறம் கட்டிவிட்டுத் தாக்கு தாக்கென்று தாக்கினர் என்று சம்பவத்தை தாம் நேரில் பார்த்ததாகப் பலர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இநதச் சம்பவத்தால் திருக்கோயில் மக்கள் வெகுண்டெழுந்து அதிரடிப் படையினருக்கு எதிராக ஆர்ப்பாட்டமும் வீதிப் போராட்டமும் நடத்தினர். பாடசாலை மாணவர்களும் எதிர்ப்புப் பேரணி நடத்தினர்.

அடுத்த நாள் 23ஆம் திகதி அம்பாறை மாவட்டம் முழுவதிலும் ஹர்த்தால் நடந்தது 24ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் அது விரிவடைந்தது.

இரு மாவட்டங்களிலும் நடந்த இரண்டு நாள்கள் ஹர்த்தாலின்போது வீதித் தடைகள் போட்டு போக்குவரத்து ஸ்தம்பிதம் அடையச் செய்யப்பட்டது. வீதிகளில் ஏராளமான டயர்கள் போட்டு எரிக்கப்பட்டன. மக்கள ஆக்ரோஷமாக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். வீரமுனைக் கிராம மக்களும் அதிரடிப்படையினருக்கு எதிரான இந்த நடவடிக்கைகளில் முக்கிய பங்குவகித்தனர்.

அதனாலேயே பழிவாங்கும் விதத்தில் அவர்களுக்குச் சவப்பெட்டி எச்சரிக்கையும் பயமுறுத்தலும். மற்றப் பகுதிகளில் உள்ள மக்களுக்கும் இது நடக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. (ஐ-4)

# கூட்டமைப்பு எம்.பிக்கள் ராஜபக்ஷவைச் சந்திப்பர்

தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் 4ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசவிருக்கின்றனர்.

தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு ஆதரவாக நடந்துகொள்ளுமாறு இந்தச் சந்திப்பின்போது கூட்டமைப்பினர் எதிர்க்கட்சித் தலைவரைக் கோரவிருப்பதாகவும் கூறப்பட்டது.

தமிழ்மக்கள் போரினால் அனுபவித்த துன்பங்கள் மற்றும் அவர்களது அபிலாஷைகள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவருக்கு கூட்டமைப்பினர் தெளிவுபடுத்தவிருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

### மற்றொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டது.

இதே கடற்கரையில் நேற்றுமுன்தினம் கரையொதுங்கிய இரு சடலங்களையும் இந்தச் சடலத்தையும் பிரேத •பரிசோதனை செய்யுமாறு யாழ்.சட்ட வைத்திய அதிகாரிக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

சடலத்தை எவரும் உரிமை கோராத பட்சத்தில் அரச செலவில் அடக்கம் செய்யும்படியும் நீதிவான் பணித்தார்.

தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பிய வழியில் படகு கவிழ்ந்ததில் காணாமற்போனவர்களின் சடலங்களாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. (ஐ-3-10)

### இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைக் காரணங்களைக் கருத்திற்கொண்டு பேச்சு இடம்பெறவேண்டும். இந்தப் பேச்சுக்களில் அடிப்படைப் பிரச்சினைக்கு இணக்கப்பாடு ஏற்பட்ட பின்னரே வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாக சபை அமைய வேண்டும் என்று ஜனாதிபதி நோர்வே குழுவிடம் தெரிவித்தார்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தான் முன்வைக்கும் யோசனைகள் அனைத்தும் சமாதானத்தை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டவையே என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-4)

### தொலைபேசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரெலிக்கொம் நிறுவன உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வெளியிடங்களில் இருந்து ஒரு சில அழைப்புகளை மட்டுமே நேற்றுப் பெற்றுக்கொள்ள முடிந்ததாகப் பாவனையாளர்கள் தெரிவித்தனர். (ஐ-3)

### மின்சார..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுவருவதாகவும்-

தாயாரான சிவயோகநாயகி உடல்நிலை தேறிவருவதாகவும் -

வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

திருநெல்வேலி வாளாக வீதியல் புதிதாக வாடகைக்குக் குடியிருக்கச் சென்ற சமயம், 'அன்ரனா' குழாயை பொருத்த முயற்சித்தபோது அது அருகே சென்ற உயர் அழுத்த மின்சாரக்கம்பிமீது சாய்ந்து வீழ்ந்ததில் இவர்கள் நால்வரும் மின்சாரம் தாக்கிப் படுகாயமடைந்திருந்தனர்.

சமீபகாலமாக மின்சாரத்தைக் கவனக் குறைவாகக் கையாளும் போக்கு அதிகரித்திருப்பதாகவும் -

இதனால் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் -

மின்சாரம் மட்டுமன்றி உயிராபத்தை ஏற்படுத்தும் அனைத்து சக்திகளைக் கையாளும்போதோ அல்லது அவை உள்ள பகுதியில் நடமாடும்போதோ மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் -

வைத்தியசாலை வட்டாரங்கள் கேட்டுள்ளன. (ஒ-6-9-15-139-ரி).


**காணி விற்பனைக்கு**

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரிக்கு கிழக்குப் பக்கமாக உரும்பிராய் வீதியில் 5 பரப்பாகவும், 6 பரப்பாகவும் தனித்தனி காணித் துண்டுகளாக விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
Mr. அரியநாயகம்,
No. 19 2/7, ஸ்ரேஷன் றோட்,
வெள்ளவத்தை.
(4231) T.P.No: 502239

**புதிய பிரிவுகள்**

அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, நிறுத்தப்பட்டிருந்த அனுமதிகள் தளர்த்தப்பட்டு, அனைத்து Diploma கற்கைநெறிகளுக்கும் 2ஆவது புதிய பிரிவுகள் 02.06.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட இருக்கின்றது என்பதை மாணவர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.
(C/22303)

**விற்பனைக்கு**

MX.Pro NICKS Video Mix. விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
கண்ணன்,
No. 29, கோபால் லேன்,
(4236) வண்ணார்பண்ணை.

**NEW SCIENCE COLLEGE**
Physics
2004
ஒலியியல் (Sound)
ஆரம்பம்:
பிரிவு I
புதன் - 4 - 5
வெள்ளி - 4.30 - 5.30
பிரிவு II
(4258) சனி, ஞாயிறு - 9 - 10


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.05.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.